# எழுத்தாணி

பல்சுவை இதழ்

ஜீலை இதழ்-08 2012

## வாழ்விடம் இல்லாதவர்கள்

## மைதானத்தை இழந்து நிற்கும் ஞானதீபம்



## அகதி வாழ்வின் அவலம்

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# Media Resources and Training Centre (MRTC)
## University Of Jaffna,Sri Lanka





In Tamil media climate, It is an exciting time of change and opportunity. A Media Study programme specifically attuned to this new media landscape offering a blend of media production skills, digital tools, creativity is required

MRTC diploma course places diploma holders in the starting blocks of a broad range of media production careers with a wide knowledge base and some specific skill sets.


In preparation for an industry in which job and skills boundaries are now converging, technical/production skills, team and communication skills, a creative outlook and an understanding of contemporary media practice and business model is the need of the hour.
MRTC Professional diploma programme develops students who can adapt to changes in this fast moving and constantly evolving media environment.

Our students have been working on lab journal, video journal and online journal during their study and have gone on to work in a range of media occupations.

The Tamil medium Journalism programme offered by MRTC is the first of its kind in the country. The courses we offering are of exceptional quality and meet the demands of the media and creative industries for talented and highly skilled diploma holders.

MRTC has productive working relationships with media industry partners, including regional, national and international media

Teaching is led by experienced industry practitioners and highly qualified tutors who guide students towards a critical and historical understanding of print, radio, television, film and new media cultures.



T.Thevananth, M.A,M.Sc.
Director,
Media Resources and Training centre
University of Jaffna

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"

# எழுத்தாணி

இதழ்-08

யாழ் பல்கலைக்கழக ஊடக மைய மாணவர்களின் பயிற்சி இதழ்


ஆசிரியர் குழு

சுபத்ரா. எம்
சுகிர்தினி. வே
தர்சிகா. சி
பாமினி. சி
எஸ். கபிலன்

நிர்வாக ஆசிரியர்

தே. தேவானந்த்

ஆலோசனை

ஆ. சபேஸ்வரன்

பக்கவடிவமைப்பு

தர்சிகா. சி.
சுபத்ரா. எம்
சுகிர்தினி. வே

ஆக்கங்கள்

சுபத்ரா. எம், சுகிர்தினி. வே, பாமினி. சி
தர்சிகா. சி, செ. கபிலன்

வெளியீடு

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.



தொடர்புகளுக்கு
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம். (MRTC)
84, ஜீம்மா பள்ளி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 0212229873
Email: directormrtc@gmail.com


## உள்ளே...


| | |
|---|---|
| அகதி வாழ்வின் அவலம் | 04 |
| வாழ்விடம் இல்லாதவர்கள் | 06 |
| கலக்கத்துடன் கச்சாய் மீனவர்கள் | 08 |
| யாழ்ப்பாண சிறார்களின் வரப்பிரசாதம்– யாழ்.மத்தியகல்லூரி நீச்சல் தடாகம் | 10 |
| யாழ் முஸ்லீம்களின் அவலம் | 13 |
| ஊடகமும் பெண் அடிமைத்தனமும் | 15 |
| மந்தகதியில் வீதித்திருத்தவேலைகள் அல்லல்படும் மக்கள் | 17 |
| புகையிலைச்செய்கையில் தனித்துவ அடையாளம் கொண்டது யாழ்ப்பாணம் | 19 |
| பெரியதம்பிரானின் புதுமைகள் | 21 |
| மைதானத்தை இழந்து நிற்கும் ஞானதீபம் | 23 |
| வலிகளுடன் வலி வடக்கு மக்கள் | 24 |
| வேஹாருக்கோர் ஜலகண்டேஸ்வரர் | 26 |
| நீர்த்தேக்கம் நோய்த்தாக்கம் | 28 |
| ஆழிப்பேரலையும் அழிவும் | 30 |

# அகதி வாழ்வின் அவலம்...

இலங்கை, இந்தியன் நாடுகளை பிரிக்கும்எல்லைக் கோடான இயற்கை வளம் நிறைந்த காங்கேசன் துறைப்பகுதியை அண்மித்துள்ள இடங்களான தையிட்டி, மயிலிட்டி, குரும்சிட்டி ஆகிய இடங் களை சொந்த இடமாக கொண்ட மக்கள் 1990 ம் ஆண்டு வடக்கில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தில் தமது பிரதேசங்களை விட்டு வெளியேறியுள்ளார்கள். மீன்பிடிப்பு, தச்சுத்தொழில், கால்நடைவளர்ப்பு என வாழ்வாரத்தொழில்களின் மூலம் தமது வழ்வாதாரத்தை கொண்ருந் தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இவ் வாறு வாழ்ந்து கெதாண்டிருந்த மக்கள் போரின் போது அழிக்கமுடியாத சொத்துகளையும், சொந்த இடங்களையும் விட்டு இடம்பெயர்ந்து வன்னி, வவுனியா என பல பகுதிகளுக்கு சென்று இறுதியாக மல்லாகம் நீதவான் முகாமில் தஞ்சமடைந்து 22வருடங்களாக அகதி வாழ்க்கை யை அனுபவித்துவருகின்றார்கள். அன்று ஆரம்பித்த அகதி முகாம் வாழ்க்கை பல துன்பங் கள், நெருக்கடிகள்என்பவற்றை சந்தித்த வண்ண மே தமது பிரதேசங்களில் செய்த வாழ்வதாரத் தொழில்களை இன்று வரையும் செய்து வருகின்ற னர்.

அகதி வாழ்க்கையை யாரும் விரும்பமா ட்டார்கள்.தமது சொந்த மண்ணுக்கு எப்போது மீள்வோம் என்ற எதிர்பார்ப்புடன் வாழ்ந்து வருகி ன்றார்கள் அகதி முகாம் வாழ்க்கை அனுபவித்து 22 வருடங்களாகியும் அந்த மக்களின் அடிப்ப டைப்பிரச்சனைகள் தீர்க்கப்படாத நிலையே. குடிதண்ணீர் வசதி, மலசலகூடவசதிகள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது வரை நிரந்தரமாக தரப்பட்டவை என் றால் இருப்பதற்கு ஒரு இடமும், ஒரு குடிசையும் தான். எமது குழந்தைகளுக்கு பாடசாலை செல் வதற்கு ஆரம்பத்தில் உதவி செய்தார்கள் அதன் பின்பு எந்த உதவியும் செய்வதில்லை.



ஆரம்பத்தில் யுனிசெப், யுன்னென்சிச்சார் ஆகிய நிறுவனங்கள் உதவிகளை வழங்கிய போதும் கொஞ்சம் பொருளாதார கஸ்ரங்கள் இல்லாமல் இருந்தது சாப்பிடமல் இருந்தாலும் பரலாயில்லை குழந்தைகளின் படிப்பு தான் அவசியம் அவர்கள்



படிப்பதற்குத்தான் நாங்கள் கஸ்ரப்படுகிறோம். குறித்த முகாமில் 65 வீடுகளுடன் 80 குடும்பங்கள் வசித்துவருகின்றனர். அந்த மக்கள் முன்வைக்கும் பிரச்சனையே தமது அடிப்படைவதி சரியாக தரப்படவில்லை என்பதே. மலசலகூட வசதி போதியளவுக்கு இருப்பினும் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் குடிதண்ணீர இல்லாமல் வாழமுடியாது. இங்கு அமைத்துக்கொடுக்கபட்ட தண்ணீர்க்குழாயில் வருகின்ற தண்ணீரை எடுத்துக்குடித்தால் சொறி, சிரங்கு.வாந்திபேதி போன்ற நோய்கள் தான் வருகின்றது. அதனால்



எமது முகாமைஅண்டியவீட்டின் மதிலில் உள்ள தண்ணீர்க்குழாயில் வருகின்ற தண்ணீரைத்தான் குடிதண்ணீராக பயன்படுத்துகின்றோம். என்ன செய்வது நாம் அகதி தானே அனுவபவித்து தான் ஆகவேண்டும். என மக்கள் அங்கலாய்க்கின்றார்கள்.

பாடசாலைக்கு செல்லும்மாணவர்கள், வேலைக்கு செல்லும்பெண்கள் காலையிலும் மாலையிலும் கான்களிலும், போத்தல்களிலும், குடங்களிலும் தண்ணீர் சுமக்கின்ற காட்சியைபார்த்திருக்க நாமும் தவறவில்லை. இந்த முகாமில் வாழுகின்ற மாணவர்கள்கல்வி முன்னேற்றமாக காணப்படுகின்றமையும் அனைத்து மாணவர்களும் மல்லாகம் மகாவித்தியாலத்தில் கல்வி கற்றுவருகின்றார்கள்.இங்கு ஒவ்வொரு மக்களும் தமது கருத்துகளை கூறியிருக்கின்றார்கள். இதனால் மல்லாகம் நீதவான் முகாமில் வாழுகின்ற மக்களை அவர்களது சொந்த இடங்களுக்கு திரும்பவேண்டும் என்பது எமது விருப்ப



மும் கூட. இவர்களின் வாழ்வில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை என்பது இவர்களில் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. இந்த முகாமில் வாழும் மக்களின் அடிப்படை வசதிகளில் கூடியளவு அக்கறையுடன் செயற்பட வேண்டிய சூழ்நிலையில் காணப்படுவதையும் உணர முடிந்தது வார்த்தைகளால் சொல்ல முடியாத பேரவலத்தில் எத்தனைவரிகளாலும் தாள்களில் நிரப்பி விட முடியாது போருக்கு பின்னரான அவலம்போரை விட மிக கொடுமையானது என்பதையே உணர்த்த முடிகின்றது.



சுபத்திரா.எம்

# வாழ்விடம் இல்லாதவர்கள்

மீன்பிடித்தொழிலுக்கு ஏற்ற இடமாக இருப்பதனாலும் காணி இல்லாத சுமார் 15 குடும்பங்கள் இப்பத்து பரப்பு காணிக்குள் வந்து குடியேறியுள்ளனர்.
இவர்களினை இவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு அரசியல்வாதிகளும் ஏனையவர்களும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

யுத்தத்தினால் இரத்தமாகிய யாழ்ப்பாணத்து நம் தமிழர் இன்று இருப்பதற்கு சொந்த நிலமில்லாமல் திரிகின்றனர். ஆனால் அரசாங்கமோ யாழ்ப்பாணத்தில் வெற்றுக்காணிகள் அதிகமாக உள்ளன என சிங்களவர்களை யாழில் குடியேற்றுகிறது. ஆனால் யாழ். மக்களோ இருக்க இடமில்லாதவர்களாகஅலைந்து திரிகின்றனர். இதற்கு யாழ். நாகரிற்கு அன்மையில்உள்ள பண்ணை கடலுக்கு அன்மையில் அமைந்துள்ள பாங்சல் வீதி கிராமம். இக்கிராமத்தில் சொந்த வீடில்லாமல் கோயில் காணிகளில் கடந்த 3 வருடங்களாக எந்தவொரு பதிவினை மேற்கொள்ளாது 15 குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றன.
கடலின் அருகில் இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருந்த இக்கிராமம் கடந்த 3வருடங்களாகவே மக்களின் வசிப்பிடமாக மாறியது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த போது எவரும் உரிமை கோரி வரவில்லை.
ஆனால் இப்போது எமது இடம் என பலர் வந்து இக்கிராமத்தினைஆக்கிரமிப்பு செய்கின்றனர்.

ஆனால் இவர்களோ வெளியேற மறுக்கின்றனர். இவ்விடத்தில் வாழும் 15 குடும்பங்கள் ஏழை குடும்பத் தவர்களாகவே இருக்கின்றனர் .இக் குடும்பங்களில் 1மாதம் தொடக்கம் 5 வயது வரையான 12 குழந்தைகள் இங்கு வசிக்கின்றன.
ஆனால் இங்கு வசிக்கும் சிறுவர்கள் அடிக்கடி நோய் வாய்ப் படுபவர்களாகவும் வயதுக்கேற்ப நிறை உயரம் என்பன காணப்படாமல் போசாக்கு அற்ற குழந்தைகளாகவும் இருக்கிகன்றனர்.

இதற்கு காரணம் இக்கிராமத்தில் சுகாதார வசதி மிகவும் குறைவாக காணப்படுவதுடன் இவர்கள் மீனினையே அதிகமாக உண்பதனால் இவர்களுக்கு நோய் வாய்படுவதற்கான காரணமாக அமைகின்றது எனசுகாதார அதிகாரி தெரிவித்தார்.
மேலும் தெரிவிக்கையில் இக்கிராமத்தின் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மலசலகூட வசதி என்பன குறைவாக உள்ளன. இதனால் இவர்கள் திறந்த வெளிகளிலே தமது தேவைகளை நிறைவேற்றுகின்றனர். என தெரிவித்தார்.



இக்கிராமத்தில் வசிப்பவர்களுக்கு குடும்ப அட்டையோ அல்லது பிரதேச பதிவோ எதுவும் இல்லை.




இக் கிராமத்தின் கிராம அலவலர்களிடம் இது தொடர்பாக கேட்ட போது. இவர்கள் அத்துமீறி இங்கு குடியேறியுள்ளனர். இதனால் இவர்களின் பதிவினை பதிந்தால் இச்செயலினை ஆதரிப்பது போல் ஆகிவிடும். இதனால் எமது பிரதேச செயலகர் இவர்களினை இக்ககிராமத்தில் பதிய வேண்டாமெனவும் அவர்கள் தொடர்பாக தீர்மானம் எடுத்த பின்புதான் இவர்களினை பதிய முடியும். எனவும் அதுவரை என்னால் இவர்களுக்கு எவ்வித உதவியும் செய்யமுடியாதெனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக இக்கிராம வாசியான சி. கமலா கருத்து தெரிக்கையில். நாம் இக் கிராமத்துக்கு வந்து 3 வருடங்களாகின்றன. எமக்கு செந்தக் காணியோ அல்லது வீடோ இல்லை இதனால் நாம் இக் கிராமத்தில் எம் தொழில்காரணமாக வந்து குடியேறியுள்ளோம் என்றார்.
மேலும் அவர் கூறுகையில் முன்பு சாவற்காடு கிராமத்தில் எனதுஅம்மாவுடன் வாழ்ந்தேன் பின் இங்கு எனது கணவர் மற்றும் 2 குழந்தைகளுடன் குடியோறியுள்ளேன் நாம் இக்கிராமத்தில் வந்தவுடன் நான் முதல் இருந்த கிராமத்தின்அதிகாரி எமது பதிவை நீக்கி விட்டார். இவ் கிராம மக்கள் எவரையும் கிராம அதிகாரி பதிய மறுத்து விட்டார். இதனால் எமது சிறுசிறு தேவைகளை கூட கிராமஅதிகாரியிடம் இருந்து பெற்றுகொள்ள முடியாமல் உள்ளனர்.

சில வேளைகளில்எங்கள் கணவரை பொலிசாரோ அல்லது இராணுவத்தினரோதடுத்துவைத்து விடுவார்கள் இவர்களை பிணையில்எடுப்பதற்கோ அல்லது இவர்கள் இக்கிராமத்தில் வசிப்பவர்கள் என உறுதிப்படுத்துவதற்கோ எமக்கு எவரும் இல்லை.
இதனால் பல இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றோம். இது போல சிறுவர்களுக்கு ஏதாவது உதவிகள் வந்தாலோ இக்கிராமத்தில் வசிக்கும் 15 குடும்பங்களை தவிர ஏனைய சிறுவர்களுக்கு கொடுக்கப்படுகிறது.
இதனால் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி எவ்வித உதவிகளும் இன்றி நாம் வசிக்கின்றோம். என தெரிவித்தார்.
இவர்களின் ஏக்கங்கள் தீருமா?

பாமினி.எஸ்



சாவகச்சேரிலில் அமைந்துள்ள கச்சாய் மீனவர் கள் கடற்தொழிலை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கென்று அரசாங்கம் இதுவரை எந்தவிதமான உதவிகளும் செய்யவி ல்லை ஆனால் ஒருசில தனியார் நிறுவனங்கள் மாத்திரமே ஒரு சிலஉதவிகளை செய்து கொடுத்தன.

இவர்களுக்கென்று எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லை மண்குடிசைகளிலே வாழ்கின்றனர். இதுவரை அவர்களுக்கென வீட்டுத்திட்டங்களும் வழங்கப்படவில்லை. மலசலகூட வசதிகளும் இல்லை, சுகாரதார வசதிகள் கூட மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. மலசலகூடவசதி இன்மை யினால் வெளியிலேமலங்கழிப்பதனால் மழை காலங்களில் மழைநீரிடன் அவை கலப்பதனால் சிறுவர்களும், குழந்தைகளும் அதிகமாக நோய்வாய்படுகின்றனர். அவர்களுடைய பிரச்ச னை தொடர்பாக நாம் உரையாடச்சென்றபோது. அங்கு ஆண்களுடன் பெண்களும் சேர்ந்து சரிநிகர் சமமாய் வலைகளை உதறி துப்புரவு செய்துகொண்டிருந்தார்கள். அங்கே சிறுபிள்ளைகள் அந்தக்கடற்கரை மணலிலேநின்று விளையாடிக் கொண்டிருந்தார்கள் கடற்கரையருகே உள்ள சிறுகுடிசையின் அருகே வயதான ஒருபாட்டி மதிய சமையலுக்காக மீன்வெட்டிக்கொண்டிருந்தார் இவற்றை எல்லாம் தாண்டி நாம் அந்த மீனவர் கூட்டத்தை அண்மித்தோம். அங்கு நின்றவர் களிடம் எம்மைஅறிமுகப்படுத்திக்கொண்டு பேச்சை தொடர்ந்தோம்.

அப்போது அங்கிருக்கும் டனிஸ் என்பவர்தான் முதலில் கதைக்க தயாராகினார். இதுதான் எங்களுடைய கடல். இவ்வளவு சிறிய பரப்புத்தான் இப்பிரதேசத்தில் 100 குடும்பங்கள் இருக்கிறம் நாம் அனைவரும் கடற்றொழிலை நம்பித்தான் வாழ்கின்றம். ஆனால் இப்போது இந்தக்கடலில் மீன்பிடிப்பது இல்லை ஆனையிறவு சங்குப்பிட்டி போன்ற இடங்களுக்கு சென்றுதான் மீன்பிடித்து இங்க கொண்டுவந்து வியாபாரம் செய்கிறம். என தமது வேலையை செய்துகொண்டே எங்களுடன் உரையாடினார்.

# கலக்கத்துடன் கச்சாய் மீனவர்கள்





மேலும் அவர் சறுகையில் பின்னேரம் 2.00 வெளிக்கிட்டாஅதிகாலை 5.30 க்கு எல்லாம் கரை ஒதுங்கீடுவம் அதற்கிடையில் படகுகளுக்கு ஏதாவது ஏற்பட்டால் அங்கிருந்து இங்க Phone பண்ணி வேற படகு கொண்டுவந்ததான் நாம் வீடு திரும்பமுடியும் என அலுத்துக்கொண்டார். அதைவிட இராணுவத்தினர் பகல்வேளைகளில் ஒரு குறிப்பிட்டநேரத்திற்குள் றவுன்ஸ் அடிப்பாங்க அதற்கிடையில் நாம அந்த எல்லையை தாண்டணும் இல்லாட்டா நம்மகதை அவ்வளவு தான் . என்றார் அதைவிட இந்த 100 குடும்பங்களுள் 50பேர் வன்னி யுத்தத்தின்போது இடம் பெயர்ந்தவர்களே அங்கு

இருக்கின்றனர் அவர்களுக்கென்று அரசாங்கதத்தால் எதுவித உதவிகளும் கிடைக்கவில்லை இருந்த போதும் மனம் சிறிதளவேனும் தளராது அப்பகுதிமக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து தமது தொழிலை செய்து வாழ்க்கையை நடாத்தி வருகின்றனர்.

மேலும் இவர்களுக்கென அரசாங்கத்தால் உதவி வழங்கப்படாதபோதும் தனியார் தொண்டு நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர் அதில் முக்கியமாக லீட்ஸ் நிறுவனம் 8000 பெறுமதியானவலைகளை வழங்கியுள்ளது. அதுவும் இரண்டு வருடங்களுக்கு மேலாகிய நிலையில் பழுதடைந்து விட்டது. எனவும் தெரிவித்தார்.

நாம் இங்கு இடம்பெயர்ந்து வந்து முன்று வருடங்கள் ஆகிவிட்டது ஆனால் அரசாங்கமோ எமக்கு எதுவிதமான உதவிகளையும் வழங்கவில்லை நாம் சென்று கேட்டபோது ஆம் என்று வெறும் பதிலை மட்டுமே மேற்கொண்டார்கள் .

இதுவரைக்கும் எதுவித உதவிகளும் எமக்கு கிடைக்கவில்லை இருப்பதற்கு வீடு இல்லை மலசல வசதிகூட இல்லை இங்கு எமது சிறு குழந்தைகள் சுகாதாரம் சீர்கேடு காரணமாக அதிகளவில் பாதிப்புக்கு உட்படுகின்றார்கள் என்றார்.

இவ்வாறான இந்த மக்களுக்கு அரசாங்கமாக இருந்தாலுமோ அரசசார்பற்ற நிறுவனங்களாக இருந்தாலும் உதவிகளை மேற்கொண்டு இவர்களின் மேவைகளைப்பூர்த்திசெய்ய வேண்டும் என்பதே அங்கு வாழும் அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாகும்.

தர்சிகா. எஸ்



# யாழ்ப்பாண சிறார்களின் வரப் பிரசாதம் - யாழ். மத்திய கல்லூரி நீர்தடாகம்

ரம்மியமும் அமைதியும் நிறைந்த சூழலில் ஜில் என்று வீசும் இளம் தென்றலின் வருடல். பள்ளி சிறார்கள் துள்ளிவிளையாடும் ஓசை.


அவுஸ்ரேலியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட புற்கள் பதிக்கப்பட்ட புற்தரையில் குவிக்கப்பட்டிருக்கும் பளிங்கு கற்கள். இவற்றின் மேலே இரண்டு பனைமரங்கள். இவ் அழகான சூழலில் நீண்டு பரந்து விரிந்த நீச்சல் தடாகம்.


30 வருடகாலத்தின் பின்பு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுவரும் அபிவிருத்திகளில் மாணவர்களின் முன்னேற்றத்திற்காக கட்டப்பட்டுள்ளது இந்நீச்சல் தடாகம். பல வருடங்களாக நீச்சல் போட்டியில் கலந்து கொள்ளாத யாழ்ப்பாண சிறார்களுக்கு மீண்டும் தமது திறமைகளை வெளிக்காட்ட ஒரு களம் கிடைத்துள்ளது.



௨5 m நீளமும் 16 m அகலமும் உடைய இந்நீச்சல் தடாகத்தின் ஆழம் 4 1/2 அடியிலிருந்து 14 அடி வரை நீடிக்கின்றது. பல வருடகாலமாக நீச்சல் போட்டியில் யாழ்பாண மாவட்டத்தில் இருந்து கலந்து கொண்டவீரர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியையே கண்டது.

ஆனால் இக்கல்லூரி மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் பயன்தரும் வகையில் கட்டப்பட்ட இந்நீச்சல் தடாகம் மீளவும் இம்மாணவர்களின் திறமைகளை பறைசாற்றி நிற்கின்றது. அண்மையில் தேசிய மட்டத்தில் 16 வயதுக்கு கீழ்பட்ட பிரிவில் ௨ km நீச்சல் போட்டியில் கலந்து கொள்வதற்காக கொழும்பு சென்ற 10 பேர் கொண்ட குழுவில் ௨ மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர். ௨ வீரர்களும் 4, 5 இடங்களை பெற்றுள்ளமை மீண்டும் அம் மாணாக்களின் ஆற்றல் துளிர்விடுவதை வெளிப்படுத்துகின்றது. யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் இதற்காக நிதியை திரட்டி இவ்நீச்சல் தடாகத்தை கட்டியுள்ளனர்.






மாணவர்களுக்கு மட்டுமன்றி எனையோரது பாவனைக்காகவும் இதனை வழங்கியுள்ளனர். இதில் பெண்களுக்கு மட்டும் என வியாழக்கிழமைகளில் ஒதுக்கியுள்ளனர். ஏராளமான பெண்கள் பயன்பெற்றாலும் அதிகமானோருக்கு நீச்சல் தெரியாதது ஓர் சவாலாக உள்ளது. இருந்தாலும் இதற்கும் இங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நீச்சல்



தெரியாதவர்கள் இங்கேயே பழகிகொள்ள முடியும்.


ஆனால் இங்கு பாடசாலை மாணவர்கள் , குடும்பங்கள் , வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் என பல்வேறு தரப்பினரும் வருகின்றனர். இதற்காக அறவிடும் கட்டணமும் அதிகமில்லை. மணித்தியாலத்திற்கு 200 ரூபா என்ற ரீதியில் கட்டணம் அறவிடப்படுகின்றது. இதனால் அதிகமானோரால் பயன்பெற முடிகிறது. கொழும்பில் இது போன்ற நீரத்தடாகங்கள் அதிகம் காணப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் தற்போதுதான் கட்டப்பட்டுள்ளது.

இருந்து வரும் மாணவர்கள் அதிபரின் கடிதத்துடன் அனுமதிக்கப்படுவர். இதைவிட 1000 ரூபா செலுத்தி அங்கத்தவராக இணைந்து கொண்டால் மணித்தியாலத்திற்கு 100 ரூபா மட்டுமே செலுத்தவேண்டும். பயிற்சி பெறுவதாயின் மேலதிகமாக 100ரூபா செலுத்தவேண்டும். இங்கு பெண்களுக்கு, ஆண்களுக்கு என தனித்தனி பயிற்றுவிப்பாளர்கள் பாதுகாப்பான முறையில் பயிற்றுவிக்கின்றனர். பெண்களுக்கான பயிற்றுவிப்பாளராக செல்வி. பொன்மலரும், ஆண்களுக்கு நான்கு பயிற்றுவிப்பாளரும் உள்ளனர். பாபு, அனுராஜ், சிவரூபன், சிமியோன் போன்றோரால் ஆண்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.



தற்போது இப்படியொரு ஆடம்பர நீரத்தடாகம் யாழ்ப்பாண மக்களுக்கு தேவைதானா என்ற ஒரு கேள்வி பலர் மத்தியில் எழத்தான் செய்கிறது. எது எவ்வாறாயினும் யாழ்ப்பாண மக்களுக்கு என இப்படியான நீர்த்தடாகம் கிடைத்துள்ளமை இவர்களுக்கு கிடைத்த ஒரு வளம் என்று தான் சொல்ல வேண்டும்.

பல ஆண்டு காலத்திற்கு பின்பு மீண்டும் யாழ் மண்ணில் பல நீச்சல் வீரர்கள் உருவாக இது வழி சமைத்துள்ளது.
இம் மாணவர்கள் நீச்சல் பயிற்சியை பெற்றுக்கொள்ள இந்நீர்த்தடாகம் மிகவும் பயனுள்ளதாக அமைகிறது.
இது மட்டுமன்றி இந்நீச்சல் தடாகத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் மாதம் ஒன்றுக்கு சுமார் 1 லட்சம் ரூபா.
இந்நிதியை பாடசாலை அபிவிருத்திக்காக பயன்படுத்துகின்றனர்.



விளையாட்டுத் துறையை கிராமத்திற்கு கொண்டுசெல்கின்ற
மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் பிரகாரம்
"நாளைய இளைஞர்" அமைப்பினால்
யாழ்ப்பாணச் சிறார்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட
இந்த நீச்சல் தடாகம்

எமக்கு கிடைத்துள்ள வளத்தை சரியான முறையில் பயன்படுத்தி அதிக பயனை பெற்றுக்கொள்வதே புத்திசாலித்தனம்.



ஆக்கம்
வே. சுகிர்தினி

# யாழ் முஸ்லிம்களின் அவலம்...




1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் தற்போது போர் முடிந்த பின்னர் தங்கள் சொந்த இடங்களுக்கு மீளக்குடியமர வந்துள்ளனர். இவர்கள் காக்கைதீவு, பொம்மைவெளி, சோனகத்தெரு ஆகிய இடங்களில் எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்ந்து வருகின்றனர். போர்க்காலங்களில் தமது வீடுகளை விட்டு சென்ற இவர்கள் தமது இடிந்த வீடுகளுக்குள் ஏதோ சொந்த ஊரில் வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் தரப்பால் குடிசைகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

மீளக்குடியமர்ந்து 3 வருடங்கள் ஆகியும் எந்த வித உதவிகளையும் செய்து தரவில்லை எனக்கூறுகின்றனர். இம்மக்கள் அரசாங்க அதிபரை போய்க்கேட்டால்,ஏன் இங்கு வந்தனிங்கள்? என கேட்கிறார் என மேலும் ஆதங்கப்படுகின்றனர். இங்குள்ள மக்களின் தற்போதைய தேவை பரிபூரணமான மீள்குடியேற்றம். அது இன்னும் இங்கு செய்து தரப்படவில்லை. சுகாதாரமான நீர் வசதி, மலசலகூட வசதி என்பன இங்கு இவர்களுக்கு இல்லை. இதனால் தொற்று நோய் பரவும் வாய்ப்பு காணப்படுகிறது. அத்துடன் மழைகாலங்களில் பொம்மை வெளி மக்கள் நீரில் மிதந்து தமது வாழ்க்கையினை கடந்த பருவ மழைகாலங்களில் சென்று பார்த்த போது அவர்களின் நிலைமை தெரியவருகின்றது.



இது தொடர்பாக சோனகத்தெரு பெரியபள்ளி வாசல் மௌவி கூறுகையில்,

நாம் விடுதலைப்புலிகளால் 1990ஆம் ஆண்டு ஒரு மணித்தியாலத்துக்குள் யாழ்ப்பாணத்தினை விட்டு உடுக்க உடுப்பும் இல்லாமல் கையில் இருந்ததைக்கொண்டு வெளியேற்றப்பட்டோம். வடபகுதி முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமைக்கான காரணம் வடபகுதி தமிழர்பகுதி குறிப்பாக யாழ்ப்பாணம் தமிழர் தாயகம் என்பதே. அவர்களின் நோக்கமாக இருந்தது. நாங்கள் வெளியேற்றப்பட்ட காலப்பகுதியில் 200 குடும்பங்கள் காணப்பட்டன. நாம் வெளியேற்றப்பட்ட காலத்தில் புத்தளம், நீர்கொழும்பு, பாணந்துறை போன்ற இடங்களில் அகதி முகாம் வாழ்க்கை வாழ்ந்தோம். தற்போதும் நாம் சொந்த ஊரில் அகதி வாழ்க்கை வாழ்கிறோம் என தெரிவித்தார்.

வெளியேற்றப்பட்ட காலப்பகுதி யினை விட தற்போது குடும்ப ங்கள் பல்கி பெருகி 600 குடும்பங்களாக காணப்படு கின்றன. அத்துடன் மக்களின் தேவையும் பலமடங்காக அதி கரித்துள்ளது.

மேலும் 15 குடும்பங்கள் வீடு காணிகள் இல்லாமல் கதீஜா பெண்கள் கல்லூரியிலும் 10 குடும்பங்கள் மதீஜா பெண் கள் கல்லூரியிலும் தமது அகதி வாழ்க்கையினை கொண் டு நடத்துகின்றனர்.

இது தொடர்பாக கதிஜா பெண் கள் கல்லூரியில் அகதிகளாக வாழ்ந்து வரும் அப்துல் சக்த் கருத்து தெரிவிக்கையில் . '20 வருடங்களுக்கு பின் சொந தஇடங்களுக்கு வந்தது சந்தோ சம் என்றாலும் இந்த நான்கு வருடத்துக்குள் அரசாங்கம் எந்தவித உதவியினையும் எமக்கு செய்து தரவில்லை' எனக் கூறினார்.

அதே பாடசாலையில் குடியம ரும் பாத்திமா நர்கம் 'ஒவ்வொ ருநிறுவனங்களும் வந்து பாக்கினம், போயினம் அவைகளுக்கும் போட்டோ கொப்பி அடிச்சு கொடுத்து பணம் வீணானது' என்றார் கவலையுடன்.

இவர்களின் நிலைப்பாடு குறித்து அப்பகுதி கிராமசேவையாளர் கூறும்போது,
இவர்கள் மீளக்குடியமர்ந்து சில உதவிகள் செய்து கொடுக்கப்பட் டுள்ளன. சிறுகைத்தொழில் கடன் வசதியும் பலருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர்க ளுக்கு வீடுகள் கட்டி கொடுக் காமல் இருப்பதற்கான காரணம் பலர் காணி உறுதி, காணிகள் இல்லாமல் உள்ள னர் அதனால் அவர்களின் தேவையினை பூர்தி செய்யாமுடி யாமல்உள்ளது என்றார்.

இங்குள்ள மாணவர்களுக்கு கல்வி வழங்கும் ஒரே ஒருபாட சாலையாக OSMANIA COLLEGE காணப்படுகிறது. இங்கு 500 க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இங்கு கல்வி ஓரளவு நிவர்தி செய்யப்படு வதாக பெயர் குறிப்பிடாத ஆசிரியர் ஒருவர் கூறினார்.

அத்துடன் அதிபர் இடமாற்ற பிரச்சனையும் பூதகரமாக காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அதிபரை சந்திக்கமுற்பட்டபோது அவர் பாடசாலை அலுவல் ஒன்றாக வெளியே சென்று விட்டு வருவத க கூறினார். இங்குள்ள ஆண் களின் முக்கியதொழிலாக இரு ம்பு மற்றும் இறைச்சி வியாபாரம் காணப்படுகின்றது தற்போது இது பாரிய பின்னடைவு ஏற்படுகின்றத என இரும்பு வியாபாரி கூறினார். இராணுவத்தினர் பாதுகாப்பு பிரச் சினையினை காரணம் காட்டி இரும்பு வியபாரத்தினை தடை செய்வதாக தெரிவித்தார். இத னால்கடன்களும்,வட்டிகளும் அதிகரித்து பெரிய குடும்ப பிரச் சினைகள் காணப்படுவதாகவும் கூறினார்.

எது எப்படி என்றாலும் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு தமது உதவிகளை செய்வது பொறுப்பா ணவர்களின் கையில் மீண்டும்,மீண்டும் இம்மக்கள் பல பிரச்சி னைகளையும்சவால்க ளையும் தமது குடும் பங்களை கொண்டு செல்வதில காணப்ப டும் பிரச்சினை தீர்த் துவைக்கப்படவேண் டும் என மக்கள் ஆவலுடன்எதிர்பார்க் கின்றனர் இம்மக் களது எதிர்பார்ப்பு எப்போறிறைவேறும் என்பது இன்னமும் கேள்விக் குறியாகவே உள்ளத இவர்களின் எதிர்பார் ப்பை தீர்த்து வைப் பது அரசாங்கத்தின் கடமை யல்லவா இவர்களின் எதிர்பார் பை தீர்ப்பாரகளா???

~எஸ்~கபிலன்~



# ஊடகமும் பெண் அடிமைத்தனமும்



ஆண். பேண்களுக்கு இடையேயான சமத்துவம் என்பது சீூகத்தில் ஒன்றுபட்ட தன்மை அற்றதாக வே பல காலமாக காணப்படுகின்றது. இங்கு பல காலமாக ஆண் ஆதிக்கத்தின் போக்கானது குடும்பம், சீூகம் நாடாளவிய ரீதிஎன்ற போர் வையில் மேலோங்கி காணப்படுகின்றது. ஆணாதி க்கம் என்பது அடிப்படைகுடும்ப மட்டத்திலே ஆரம்பித்து இன்று பல் துறையிலும் ஆணாதிக்கம் வேறூன்றி காணப்படுகின்றது. இத்தகைய தாககம் பல பெண்கள் மத்தியில் வெளிக்கொணராத துன் பங்களாவே காணப்படுகின்றன. அத்துடன் சீூக கட்டுக்கோப்பு என்ற தலைசவிதிக்குள்ளும் வாழ்ந்து வருகின்றனர்.

இன்றைய நூற்றாண்டு பல வளர்ச்சிகளை கண்டபோது பெண்கள் பெண்அடிமைத்தனம், பெண்வன்முறை, பாலியல்வன்புணர்வு என்று பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடந்து வரு கின்றது.

அதனை உலகிற்கு பொழு து போக்கு விடயமாக காட்டிவருவது ஊடகங்களின் பங்கு முதல் நிலை வகிக்கின்றது. ஊடகங்கள் இன்றைய காலத்தில் செய்திகளை சொல்வதை விட வியாபாரப்போட்டியி னால் சுவாரசம் கலந்த தகவல்களை கொடுப்பதில் முன் நிலையில் நிற்கின்றது. அத்தகைய சுவாரஸ்சத்துக் குள்ளும் பெண்கள் என்ற விடயத்தை ஊடகங்கள் பகடைக்காயாக பயன்படுத்தி வருகின்றன.

குறிப்பாக ஊடகங்கள் பெரிய இடத்து குடும்பத்து சமாச்சாரங் கள் முதல் அடித்தட்டு மக்களின் குடும்பத்தில் நிகழு ம் சண்டைகளை ஊடகத்தின் ஊடாக உலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டுகின்றது. சட்டங்கள் தீர்வு சொல்லும் காலம் மாறி குடும்ப பிரச்சனைக்கு ஊடகங்கள் தீர்ப்பு சொல்லுகின்றன. இதில் ஊடகத்தினுடைய வியாபாரம் பெருகிறதே ஒழிய குடும்ப பிரச்சனைக் கு தீர்வு கிடைக்குமா? ஏ ன்பது சந்தெகம் தான். இங்கு கணவன், மனைவி உறவுகள் வரையும் கள்ளக்காதல் உறவு வரை வெட்ட வெளிச்சமாக உலகிற்கு காட்டிவருகிறது. ஊடகங்கள் போட்டி கள் நிறைந்த உலகில் இலத்திரனியல் ஊட கங்கள், பார்வையாளரை தம் வசம் வைப்பதற் காக குடும்பப்பிரச்சனைகளை சந்தி சிரிக்க வைப் பது போன்று அச்சு ஊடகங்கள் விற்பனையை பெருக்குவதற்கு அட்டைப்படங்கள் நேர்காணல் கள் என பெண்கள் கவர்ச்சிப்பொருளாக காட்டுகி ன்றனர்.

பெண்ணியவாதிகள் நாளுக்கு நாள் புதிய கருத்து களை கூறி வந்தாலும் ஊடகத்தின் ஊடாக வெளிக்கொணப்படும். பெண் அடிமைத்தனத்தை தடுப்பதில்லை. குறிப்பாக சின்னத்திரை என்ற தென் இந்திய படைப்புக்கள்

தென் இந்திய படைப்புக்கள் பெண்களை புதுமைப்
பெண்களாக காட்டாது. அழு கைப்பெண்களாவே
காட்டுகின்றனர். இத்தகைய சின்னத்திரை மோகங்கள்
தற்போது ஒவ்வொரு வீடுகளிலும் அரங்கேற்ற
வைக்கின்றது. சின்னத்திரையில் பெண்களை ஆண்க
ளுக்கு நிகராக காட்டுவதும் பின்னர் ஆண்களுக்கு
அடிமையாக மாறுவதும் என்ற போக்கு எல்லா
தொடரின் கதைப்போக்காக அமைந்துள்ளது. இதே
வேளை திரைப்படங்களை எடுத்துக்கொண்டால் திரை
க்கதைகளும் எந்த தொடர்பும் இன்றி வந்து போகும்
காட்சியாகவே பெண் நடிகைகள் காணப்படுவதும்
கவர்ச்சிக்கே இவர்களின் பிரதான நடிப்பாக காணப்படு
கின்றது.

தற்போது ஒரு நடிகனுடன் நடித்த நடிகை இரண்டு
மூன்று படங்கள் கழித்து அதே நடிகனுக்கு தாய்க்
கதாபாத்திரமாக நடிக்கவேண்டிய காலகட்டத்தில்
பெண்கள் இருக்கின்றார்கள் தற்போதைய சினிமாத்து
றையில் நடிப்பை விட பெண்கள்கவர்ச்சியினைக்காட்டி
யே பிரபல்யம் அடைய முடியும் என்ற எண்ணத்திலே
யே சினிமாத்துறை காணப்படுவதனால் இன்றைய
நடிகைகள் மிகக்குறுகிய காலத்தில் கவர்சர்ச்சியி
னைக்காட்டி பிரபல்யம் அடைகின்றனர் ஆனால்
அந்தக்கவர்ச்சியினால் வந்த பிரபல்யம்
நீண்டநாள் நிலைத்து நிற்காமல் சில
வருடங்களின் பின்னர் அவர்களின் பிரபல்யம்
குறைய ஆரம்பித்துவிடும் இதனால் பெண்கள்
சினிமாத்துறையில் அவர்களின் அடிமைத்தனத்
தினூடாகவே அவர்களின் வளர்ச்சி குறைவடை
கின்றது லத்தில
பிரபல்யம் அடையும் தன்மை திரைப்பட
த்துறையில் பெண்களுக்கான அடிமைத்தனமாவே
காணப்படுகின்றது.



ஊடகங்கள் ஊடாக காட்டப்படும் பெண்
அடிமைத்தனம் ஒரு புறம் ஊடகங்களில் பணிபுரி
யும் பெண்களுக்காக பங்கு மிகவும் குறைவாக
உள்ளதுடன் அவர்களுக்கான பதவிகளும்,
பொறுப்புகளும் தகுதி அற்றவையாக காணப்படு
கின்றது. பொதுவாக ஒரு ஊடக நிறுவனம்
ஒன்றை எடுத்து நோக்கில் அரசியல்,
பொருளாதாரம் போன்ற முக்கிய செய்திகளை
தீர்மானிப்பதில் ஆண் தலையிடம் பொழு து
பெண்களுக்கு அழகுக்குறிப்பு, சமையல்குறிப்பு,
சமயசந்நதி போன்ற நிகழ்ச்சிகளுக்கு பெண்கள்
பொறுப்பானவர்களாக காணப்படுகின்றனர்.
இவற்றுடன் செய்தி சேகரிக்க செல்லும்
இடங்களுக்கு பெண் செய்தியாளர்கள் எனின்
அவருடன் ஆண்செய்தியாளர் அனுப்பும்
போக்கும்காணப்படுகின்றது. வன்செய்திக்கு
ஆண்சய்தியாளரும் , மென் செய்திகளை
சேகரிக்கச்சல்லும் பெண்செய்தியா
ளர்களையும் தரம் பிரித்து அனுப்பும்
தன்மை காணப்படுகின்றது.
தொலைக்காட்சிகளில் பொழு துக்கு
அம்சங்கள் நிறைந்த நிகழ்ச்சிதொகுப்பா
ளாராக அழகிய பெண்கள்
அரைகுறை ஆடையுடன்
வலம் வருவதும் அரசியல்
கருத்துகளை நேர்காணல்கள்
போன்ற முக்கிய நிகழ்ச்சிக
ளை தொகுத்து வழங்க
ஆண் வர்க்கமும் காணப்படு
கின்றது. இவற்றுடன் ஊடாக
நிறுவனங்கள் ஊதியம் வழ
ங்குவதில் ஆண்களுக்கு
அதிகமாகவும் பெண்களுக்கு
குறைவாகவும்தற்போது
குறைவாகவும் காணப்படுகின
றது. கில் பெண்அடிமைத்த
னத்தைக ஊடகங்கள் காட்டி
வதுடன் உடகங்களில்
பெண்களினல உம் நிலையாக
காணப்படுகின்றது.

எஸ்.கபிலன்



அபிவிருத்தியை நோக்கி பயணிக்கும் யாழ்.மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திகளுக்கு மத்தியில் வீதி அபிவிருத்தி பணிகளும் இடம்பெற்று வருகின்றன. வீதிகளுக்கு காபற் போடுதல், வீதி அகலிப்பு, ஒரு வழிப்பாதை, கால்வாய் அமைத்தல், வீதி திருத்த வேலைகள் என பலவும் மக்களின் மேம்பாட்டிற்காக இடம்பெற்றுவருகிறது. இவையாவும் மக்களின் நலனுக்காகவே செய்யப்பட்டிருந்தாலும் இவ் அபிவிருத்தி செயற்பாடுகள் இழுத்தடிக்கும் போது அபிவிருத்தியின் பின் கிடைக்கும் நன்மையும் பெரிதாக தோன்றாது.

# மந்த கதியில் வீதி திருத்த வேலைகள் - அல்லல்படும் மக்கள்

மந்த கதியில் இடம்பெறும் திருத்த வேலைகளால் ஏற்படும் சிரமங்கள் மிகவும் மோசமானது. பாதிக்கப்படுபவர்களும் பொதுமக்கள் தான். உரும்பிராயிலிருந்து கோண்டாவிலுக்கு செல்வதற்கு பலாலி வீதிக்கு அடுத்ததாக மக்கள் பயன்படுத்துவது கோண்டாவில் அரசடி வீதி. இவ்வீதி சிறிய வீதியாக இருந்தாலும் டிரக்ரர், வான், லான்மாஸ்டர், ஒட்டோ என பல வகையான வாகனங்களும் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. இவ் வீதியில் இடையிடையே 2 மாதத்திற்கு முன் [illegible] [illegible]. இதன் போதே போக்குவரத்து செய்வதில் மக்களுக்கு [illegible] ஏற்பட்டுவிட்டது.






பொருட்சேத்துடனான சிறிய அளவிலான விபத்துக்களும் அடிக்கடி ஏற்பட்டது. 2 வார காலமாக முற்றிலும் கற்களை குவித்துவிட்டு திருத்த வேலைகள் மந்த கதியில் நகர்ந்து வந்தது. இன்னமும் முற்றாக முடிவடைய வில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல யாழ்ப்பாணத்தில் பல வீதிகளின் திருத்த வேலைகள் மந்த கதியிலேயே நடைபெறுகிறன. இதற்காக மாற்றுப் பாதைகள் இருந்தாலும் மிக நீண்ட பாதைகள் என்பதால் போக்குவரத்து சிக்கல்களை மக்கள் எதிர்கொள்கின்றனர்.


ஆக்கம் : வே. சுகிர்தினி



இதிலும் வேடிக்கை என்னவென்றால் ஒரு வாரத்தில் முடிவடைய கூடிய வேலையை 2 மாதங்கள் வரை இழுத்தடிக்கின்றனர். பெரிய கற்களும் போடப்பட்டுள்ளதால் கற்களுக்கு மேலாலும் போக முடியாத நிலை இம்மக்களுக்கு. இது போல கொக்குவில் ஸ்ரேசன் வீதியில் வாய்க்கால் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 3 மாதங்களுக்கு மேலாகியும் முடிவடையாத நிலையிலுள்ளமை மக்களை மிகவும் வேதனைக்கு உட்படுத்துகிறது. இழுத்தடிக்கும் வேலைகளால் இழுபறிப்படுகிறது இக்கிராமங்களை சேர்ந்த மக்களின் நிலை. அத்தியாவசிய தேவைகளுள் ஒன்றான போக்குவரத்து இன்று கேள்விக்குறியாக மாறி நிற்கின்றது. இதனை கண்டும் காணாமல் இருக்கும் அதிகாரிகள் மந்த கதியில் இடம்பெறும் திருத்த வேலைகளை பூர்த்தி செய்ய முன்வர வேண்டும்.



எல்லா பக்கங்கலிலிருந்தும் சிரமங்களை வாழ்க்கை போராட்டத்தில் இதனையும் அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை. சபிக்கப் பட்டவர்களாய் வாழப்பழகி விட்டனர் இம்மக்கள்.



# புகையிலை செய்கையில் தனித்துவ அடையாளம் கொண்டது யாழ்ப்பாணம்

*நீண்ட பாரம்பரியத்தை கொண்ட வடபகுதி மக்களின் அதிக வருமானம் சிறந்த முன்னேற்றம்*

யாழ்ப்பாண வாழ்வியலுடன் தொடர்புடைய தொழில் என்றால் விவசாயம். எந்தவொரு தொழில் செய்தாலும் அது தமக்கு கடவுள் தந்த கொடை என கருதுகின்றனர். விவசாயத்தில் விவசாயி இலாப, நட்டத்தை கருதாமல் அந்தந்த பருவத்திற்குரிய பயிர்ச்செய்கையை மேற்கொள்கின்றான். இந்த பருவத்தில் புகையிலைச்செய்கையை

செய்து வருகின்றனர். புகையிலைச்செய்கை எல்லோரும் தான் செய்கிறார்கள். ஆனால் எல்லோரும் ஓரே பருவத்தில் வெட்டி காயவிட்டு விற்பனைக்கு அனுப்புகின்றனர். எந்தவொரு பயிர்ச்செய்கையிலும் பார்க்கவிவசாயிகளின் அதிக இலாபத்தை பெற்றுக் கொடுப்பதே இந்தபுகையிலைச்செய்கையாகும்.

யாழ் மாவட்டத்தை பொறுத்த மட்டில் உயர் விவசாய பகுதிகளாக உடுவில், கோப்பாய், நல்லூர் ஆகிய பகுதிகளில புகையிலைச்செய்கை செய்யப்பட்டு விற்பனைக்கு வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இலாப, நட்டத்தை பார்த்தால் எந்தவொரு பயிர்ச் செய்கையும் செய்யமுடியாது என்றார் ஏழாலையில் புகையிலைச்செய்கை மேற்கொள்ளும்

சி.சதீஸ்கந்தராசா. 'இவர் மேலும் கூறுகையில் தோட்டத்தில் ஒரு பயிரை



நாட்டி அவற்றை விற்பனை செய்யும் வரை ஒரு தாய் தனது பிள்ளையை பார்ப்பது போல கவனிக்கின்றோம். தற்போது மண்ணெண்ணெய் விலையேற்றத்தால் அடிக்கடி தண்ணீர் பாய்ச்சமுடியாது. ஆனால் ஒன்றும் செய்ய முடியாது தண்ணீர் பாய்ச்சாவிட்டால் வளர்ச்சி இல்லாமல் போய்விடும். இந்த பருவத்தில் முளைகளை கிள்ளிவிட்டால் வளர்ச்சி கூடாது ஒரு சாதரண வளர்ச்சியுடன் இருந்தால் தான் புகையிலைக்கு மதிப்புண்டு.' என்று கூறியுள்ளார்.

புகையிலைச்செய்கை பற்றி வயது முதிர்ந்தவர்களிடம் தான் கேட்கமுடியும். புகையிலைச் செய்கையில் சகல திறமைகளுடன் இருக்கின்றார் என்றால் ஏழாலையில் 30 வருடங்களாக விவசாயம் மேற்கொள்ளும் ஆர். கனகசபையில் அவரிடம் புகையிலைச்செய்கை பற்றி கேட்போது ' நாம் இந்த பயிர்ச்செய்கைக்காக செலவிடும் பணத்தில் இருமடங்கு இலாபம் கிடைக்கின்றது. அதற்காக ஒவ்வொரு பருவத்திலும் தான் செய்ய முடியும். அந்தந்த காலத்தில் தான் பயிரை நாட்ட முடியும். புகையிலைச்செய்கையை மேற்கொள்ள முன்னர் நிலத்தை பதப்படுத்தி உரப்பசளைகள் போட்ட பின் தான் பயிரை நாட்முடியும். காலம் வந்தால் வெட்டுவதற்கு உகந்தது என



ஒரு அளவான பயிராக வரும் போதும் உரப்பள ளைகள் போடவேண்டும். அதன் பின்பு இந்தபருவத்தில் அதன் முளைகளை கிள்ளிவிட வேண்டும். முளைகளை கிள்ளி விடும் காலம் வந்தால் வெட்டுவதற்கு உகந்தது என கருதமுடியும். இதற்காக எமது முழு நேரத்தையும் செவழிக்கின்றோம். எனக்கு சென்ற வருடத்தில் ஒன்றரை இலட்சம் ரூபா இலாபம் கிடைத்துள்ளது. சில சந்தர்ப்பங்களில் புகையிலைகள் மடிந்த நிலைக்கும் போய்விடக்கூடும். அதற்காக நாமும் மடிந்து விடக்கூடாது. புகையிலை செய்கை செய்தால் வயல் மறுபடியும் உழுது சமப்படுத்த வேண்டும். அதற்கு 3000 ரூபா செலவாகும்.

அதன் பின் இயற்கைப்பசளைகளை போட்டு சமப்படுத்தவேண்டும். நாம் இவ்வளவு தூரம் கஸ்ரப்பட்டதால்தான் இன்றும் விவசாயத்தை கைவிடாமல் இருக்கின்றோம். கஸ்ரப்படத்தான் வேண்டும் .

எமது பரம்பரை தொழிலை விடமுடியாது எனக்கு 3 நிலங்கள் உள்ளது மூன்றிலும் புகையிலைக் செய்கைத்தான் செய்கின்றேன். யாழ் மாவட்டத் தை பொருட்டு புகையிலைச் செய்கை முதலாவது இடம் எமது முதாதையரின் வாயில்புகையிலை யும். சுருட்டும் காணப்படுகின்றது. அன்றாடம் ஏன் பாவிக்கின்றீகள் என்று கேட்ட போது உங்களுக்கு இனிப்பு பதார்ததங்கள்வாயினுள் இருப்பது போல எமக்கு புகையிலை அவசியம். புகைப்பிடித்தலுக்குரிய பல பாவனைகள்இருந்தா லும் பெரியவர்கள் சுருட்டைதான் பிடிக்கிறார்கள்.

சிகரெட் பிடிப்பதால் மரணம் எம் அருகில் என்று ஆய்வில் சொல்லப்படுகின்றது. இதனால் சுருட்டு பிடிக்கின்றோம் இதனால் எந்த வொரு ஆபத்தும் வரப்போவதில்லை. என்று கூறுகிறார் கள். ஒரு தொழிலை செய்வர்களுக்கு தான் அவர்களது கஸ்ரம் புரியும் சாதரண தொழில்க ளை விட ஒரு விவசாயி தனது முழு நேரத்தையும் செலவழித்து பாடுபடுகின்றார்கள். எந்த வொரு பயிர்ச்செய்கை செய்தாலும் இரவு பகலாக கண் விழித்து பயிரை பாதுகாக்கின்றனர்.

தற்போது புகையிலைச்செய்கை வெட்டப்பட்டு விற்பனைக்கு அனுப்பபடுகினறது. பயிர்செய்கை யில் அதிக இலாபகரமாக இருக்கின்ற போதும் சில விவசாயிகளுக்கு அது நட்டத்தையே ஏற்படுத் துகின்றது. சில வேளைகளில் புகையிலைகள் சுருங்கி வளர்ச்சி இல்லாமல் போய்விடுகிறது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் ஏற்படுகின்றது. தற்போது புகையிலைகள் வன்னி, வவுனியா, கொழும்பு போன்ற மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் சுருட்டு வருமா? என்று எமது பாட்டியே கூறுவார் இங்கு புகையிலைக்காம்புக்கும், சுருட்டுக்கும் தனி இடம் உண்டு, இளைஞர்களுக்கு சிகரெட் மாதிரி வயது முதிர்ந்தவர்களுக்கு சுருட்டு காலையில் வயது முதிர்ந்தவர்கள் தேநீர் குடிக்கிறார்களோ தெரியாது கண்டிப்பாக சுருட்டு இருககும்.



எம். சுபத்திரா

# பெரிய தம்பிரானின் புதுமைகள்

கொன்றை மரங்களின் நடுவே குளிர்ச்சியான குளக்கரையின் அருகில் கோயில் கொண்டிருக்கும் வரலாற்று புகழ்மிக்க ஆலயம் தான் பெரிய தம்பிரான் ஆலயம். இந்தக்கோவில் ஒரு பாம்பு புற்றிலிருந்து தான் தோற்றம் பெற்றது. பாம்பு புற்றை ஆதரித்த காலத்தில் இருந்து இன்று வரை எல்லோர்மத்தியிலும் பேசக்கூடிய ஆலயமாகவும் ஆரம்பத்தில் நாதம்பிரான் என்று அழைக்கப்பட்டமையும் அதன் பின்னர் பெரிய தம்பிரானாக மாறியுள்ளமையும் சிறப்புக்குரியதாகும். பெரிய தம்பிரான் ஆலயபொங்கல் விழாவை பார்க்கும் முதல் ஆலயத்தின் வரலாறு பற்றி கூறவேண்டும்.

ஆலயங்களுக்கு என சிறப்பு மிக்க கிராமமாக ஏழாலை எனும் அழகிய கிராமம் ஏனெனில் ஏழு தெய்வங்களும் ஒரே இடத்தில் தோன்றியமையால்ஏழாலை என்ற பெயர் பெற்றுள்ளது இக்கிராமத்தில் தான் 07 தெய்வக்கன்னிப்பெண்கள் தோன்றியுள்ளனர். இது நிகழ்ந்த இடமாக தான் சாடியடி என்று சொல்லப்படுகின்றது தெய்வக்கன்னிப்பெண்கள் தோன்றியமையால் கன்னியர் ஆலயம் ஒன்று தோற்றம் பெற்றது. இந்த ஆலயம் வண்ணையர் என்று சொல்லப்படுகின்ற இனத்தவரின் ஆலயமாக காணப்படுகின்றது. இவர்களது தொழிலாக சலவைத்தொழில். முன்னொரு காலத்தில்இவர்கள் சலவைத்தொழில் செய்யும் சாடியிலன்சிவபெருமான் தோன்றியதாகவும் தன்னை ஆதரிக்கும் படியும் இது நிகழ்ந்தது ஆவணி மாத கடைசிச்சனிக்கிழமை எனவும் அக்கினி மூட்டி தீமிதிப்பு வைபவம் நடைபெறவேண்டும்எனவும் இவ்வாறு தீ வளர்த்த போது படிமாத்தான் ( பெரியதம்பிரான் ) தோன்றினார் என்பதும் 'பெரியதம்பிரான் ஆலயத்தில் நடைபெறும் ஒவ்வொரு பூசைகளுக்கும் இங்கிருந்து தான் மடைப்பண்டங்கள் எடுத்துச்செல்லப்படுகிறது என்பதும் வரலாறு. சாடியிலன் சிவபெருமான் தோன்றியமையால் சாடியடி என்று அழைக்கப்படுகிறது.



இந்த சாடியடியுன் தான் கன்னியர் என்கின்ற ஆலயம் அமைந்துள்ளது. இங்கு தான் 7 கன்னிப்பெண்கள் தோன்றியுள்ளனர் இந்த வரலாற்று உண்மையை அறியும் நோக்கில் கன்னியர் ஆலய சபையினரான சி. வடிவேலு என்பவரிடம் கேட்டபோது '7 கன்னியர் என்று 7 இசைகளையும் தான் சொல்லப்படுகிறது. கன்னியர் அலயத்தில் முன்பாக உள்ள வெளி யில் கன்னிப்பெண்கள் தோன்றியுள்ளார்களாம். அவர்கள் யார் என்று பார்த்தால் தெய்வக்கன் னிப்பெண்கள் அவர்கள் பார்ப்பதற்கு சிறுமிய ரைப்போலவே இருந்தார்கள் ஆனால் அவர்கள் கன்னிப்பெண்கள். இந்த சாடியடி என்கின்ற முற்றவெளியில் கிராம இளைஞர்கள், சிறுவர்கள் என விளையாடுவார்கள் ஆனால் இந்த ஆலயத்தில் கொடியேறினால் யாரும் விளையா டக்கூடாது அதன் பின்னர் யாருக்கும் ஏதா வது காயம் ஏற்பட்டால் வாழ்க்கைமுழுவதும் காயம் ஆறாமல் போய்விடுகிறது. இந்த ஆல யத்தில் ஒரு காலத்தில் தீமூட்டப்பட்டது அதன் பின்னர் இங்கு தீ மூட்டப்படுவதில்லைமடைப் பண்டங்கள் எடுத்து செல்லப்பட்டு பெரியதம்பி ரான் ஆலயத்தில் இறக்கப்பட்டு தீமிதிப்பு இடம் பெற்று வருகிறது. அது தான் ஆண்டு தோறும் இடம்பெற்று வருகின்றசித்திரை யாகப்பெருவிழா, வருடாந்த பொங்கல், தீமிதிப்புவிழா என்பன சிறப்புவாய்ந்த விழாவாகநடைபெற்று வருகிறது' என்று கூறினார்.

ஒரு காலத்தில் கன்னியர் ஆலயத்தில் தீ மூட் டப்பட்டு தீ மிதிப்பு வைபவமும் இடம்பெற்றது. அதன்பின்னர் தான் பெரியதம்பிரானில் தீமிதிப்பு வைபவம் இடம்பெறவேண்டும் என்று சம்பிரதா யம் வளர்க்கப்பட்டது. சித்திரை யாகப்பெருவிழா என்று அழைக்கப்படுவதற்கு காரணம் சித்திரை மாதத்தில் வருடப்பிறப்பு முடிந்து 08வது நாள் கொடியேறி அதையடுத்து வரும் 08வது நாள்தான் தீமிதிப்பு வைபவம் இடம்பெறும். கொடியேறி தீமிதிப்பு வைபவம் இடம்பெறும் வரையும் கோவிலுக்கு யாரும் செல்லக்கூடாது என்பது ஐதீகமாம். ஒரு தடவை ஒரு இளைஞன் தோட்டத்திற்கு சென்று விட்டு கோவிலின் முன் வீதியால் வந்தான் அதே வேளை அவனை நாகபாம்பு துரத்தியதாகவும் அவனே ஓடிச்சென்று எல்லோரிடமும் கூறினான் என்பதும் கடந்த வருடத்திற்கு முதல் வருடம் நிகழ்ந்த சம்பவம் இது. இந்தக்கோவிலின் பெரு விழா எப்போதும் புதன்கிழமையும், வியாழக்கிழமை யும் தான் இடம்பெறும். புதன் கிழமை அன்று சாடியடி என்று சொல்லப்படுகின்ற முற்றவெளியில் அமைந்துள்ள கன்னியர் ஆலயத்தில் மடைப்பண்ட ங்கள் எடுக்கப்படும். அன்றைய தினம் இரவு நேரத்தில் சிறப்பு பூசைகள் இடம்பெறும். பூசை நேரத்தில் ஒலிக்கப்படும் பறைஒலிகளும், கலையாட் டங்களும் சிறப்பாக இருக்கும். கோவிலுக் கான மடைப்பண்டங்கள் கோவில் பூசகர் வீட்டிலிருந்து தவில்,நாதஸ்வர இசைகளு டன் கன்னியர் அலயத் திற்கு எடுத்து வரப்பட்டபின்னர்தான் பூசைகள் இடம்பெறும். அதன் பின்னர் 12.00 மணிக்கு மடைப்பண்டங்கள் வெள்ளை சேலையினுள் கட்ட ப்பட்டு வயல் வெளிகள் கடந்து, குளக்கரையில் உள்ள பெரிய தம்பிரான் ஆலயத்துக்கு எடுத்து செல்லப்படும். அதிகாலை 2.00 மணிக்கு அக்கினி வளர்க்கப்படும். அதன் பின்னர் 3.00 மணிக்கு பொங்கல் பானை ஆலயத்தின் உரிமை (வளர்ந்து) என்று கூறுவார்கள். அந்த நிகழ்வு இடம்பெறும் ஆலயத்தை சுற்றி நூற்றுக்கணக்கான பொங்கல் பானைகள், பார்க்கும் போது எவ்வளவு அழகாக இருக்கும். ஆனால் எங்கும் நெருப்புக்காட்சியாகத் தான் இருக்கும். அக்கினி (தீ ) நோக்கி யாரும் செல்லமுடியாது. கண்ணை பறிக்கும் நெருப்பு முகத்தை எரிக்கும். இவ்வளவு காட்சிகளையும் பார்க் கும் சந்தர்ப்பம் வரு டத்தில் ஒரு தடவை தான் கிடைக்கும். கோ விலின் சிறப்பு என்றால் ஒலிக்கப்படும் பறை ஒலி களும், கலையாட்டங்களு ம்தான். கலையாட்டங்க ளில் அனுமர்ஆட்டம், வைரவர்ஆட்டம், பாம்பு ஆட்டம், மரத்தில் ஏறிநின்ற ஆடும் ஆட்டம் என பல வகையான கலையாட்டங்க ளாகும் அவ்வளவும் சிறப்பா னவை என்றே கூறமுடியும்.




இளமையில் கல்வி சிலையில் ஏழுத்து என்றால் பழமொழிக் கமைய ஒருவர் தனது பாலர்பாடசாலை யில் இருந்தோ கல்வியினை கற்கத் தொடங்கிவிட்டான் இவ்வாறு தொடங்கும் கல்விதான் ஒருவனது எதிர்காலத்தை தீர்மானிக்கின்றது ஒருவன்பாலர் பாடசாலையில் இருந்து எல்லா செயற்பாடுகளிலும் இடுபட்டால் தான் தனது பாடசாலை வாழ்க்கயில் எல்லா செயற்ப்பாட்டாலும் பங்கு பற்ற முடியும்.

அத்துடன் சிறிய இடமான இவ் சனசவக நிலையத்தில் குழுவாக விளையாடுவதோ அல்லது சிறு உடல்பயிற்சி செய்வதற்கோ இட வசதி போதமையாக உள்ளது தற்போது எல்லாப் பாடசாலைகளும் முன்னேறிவரும் இக்காலகட்டத்தில் இவ்வாறான சில பாடசாலைகள் அபிவிருத்தியடையாமலே காணப்படுகின்றது.

இப் பாடசாலை தொடர்பாக ஆசிரியரிடம் கேட்டபோது எமது பாடசாலையில் கல்வி கற்க்கும் மாணவர்கள் எல்லோரும் திறமை

# மைதானமற்று இருந்து நிற்கும் ஞானதீபம்



[illegible] ளின் திறமைகளை வெளிக் கொண்டுவர எம்மால் முடிகின்றது. விளையாட்டிவல் மிகுந்த ஆர்வம் உடைய பிள்ளைகளின் ஆர்வத்தை எம்மால் ஊக்கப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது ஏன் என்றால் எம்மிடம் விளையாட்டு மைதானமும் இல்லை பிள்ளைகள் விளையாட வேண்டும் என்றால் வீதிகளில் நின்றுதான் விளையாட முடியும் இதனால் வீதிகளில் போகும் வாகனங்கள் பிள்ளைகளின் மேல் மோதி விடுமோ என்ற பயத்தினால் நாங்கள் வீதிகளில் விளையாட விடுவதில்லை ஆனால் இவ்வாறு இருந்தும் எமது பிள்ளைகள் ஏனைய பாலர் பாடசாலைகளோடு இடம் பெறும் விளையாட்டுக்களி வெற்றியீட்டி எள்ளன் கடந்த மாதம் தொன்மராட்சி வலையத்திற்க்குட்பட்ட 20 பாலர் பாடசாலைகளுக்கிடையோ இடம் பெற்ற இசையும் அசைவும் நிகழ்ச்சியில் எமது பாடசாலை முதலாம் இடத்தை பெற்றது இது நாம் பெருமைப்பட வேண்டிய விடையம்.

பல பாலர் பாடசாலை கள் அபிவிலுத்தி அடைந்து வந்த கால கட்டத்தில் இலை மறை காயாகசில கிராமங்கள் உள்ள பாலர் பாடசாலைகள் அபிவிருத்தி அடையாமல் கானப்படுகின்றது .

இதற்கு மட்டுவில் கிராமத்தின் அமைந்துள்ளது ஞானதீபம் பாலர் பாடசாலையினை குறிப்பிட முடியும் இப் பாடசாலையில் கிட்டத்தட்ட இருபது குழந்தைகள் கல்வி கற்க்கின்றனர் ஆனால் இப்பாடசாலைக்கு சொந்தமாக ஒரு கட்டிடம் சட இல்லாமல் உள்ளத மட்டுவில் வீரகத்தி பரம்பரையினரால் 1979 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது அன்றில் இருந்து 2000 ம ஆண்டு வரை இப்பாடசாலையானது தனியாருக்கு செந்தமான கானியினுள் சிறு கொட்டினுள் இயங்கி வந்தது மிகவும் சிறப்பான மானவர்கள் வெளியோற்றப்பட்டனர்.

2000ம் ஆண்டு தொன்மராடச்சியில் இடம் பொற்ற இனப்பிரச்சினையின் போது முற்றாக சேதம் அடைந்து காணப்பட்டது 2001ம் ஆண்டு மீள் குடியோறியதும் இப்பாடசாலை இயங்குவதற்க்கு காணியில்லாமல் சில காலம் இயங்ககாமல் இருந்தது. ஆனால் இவ் சனசவக நிலையங்கமிகவும் சிறியதாககாணப்படுவதனால் மானவர்கள் ஒடியாடி விளையாட முடியாமல் கானப்படுகின்றது. இத்துடன் இவர்கள் இருந்து படிப்பதற்க்கும் இடம் போதாமையாக உள்ளது.

விளையாட்டில் ஆர்வம் உள்ள மாணவர்களுக்கும் இவ்விடத்தில் விளையாட்டுக்கள் பழக்கமுடியாத நிலையில் உள்ளது. சிறுவர்கள் இருந்து படிப்பதற்கு இடம்போதமையாக காணப்படுகிறது

விளையாட்டு மைதானமே இல்லாமல் மெது மானவர் விளையாடடில் வெற்றி பெறுகின்றனர் மெது மாவர்கள் ஏனைய விளையாட்டுக்கலிலும் வெற்றி பெற்றுள்ளன் நாம் மைதானம்வேணும் என பல அமைச்சர்களிடம் மனுக் கொடுத்துள்ளோம் ஆனால் பலன் இல்லை எனத் தொரிவித்கார் இவ் மாணவர்களின் வாழ்வில விளையாட்டும் நிலைக்க்வேண்டும்

மாணவர்கள் வியைாட்டிலும் சிறந்வதர்களாக திகழவேண்டும் எனவே மாணவர்களுக்கு விளையாட்டு மைதானம் அவசியம். அதனைப்பெற்றுக்கொடுப்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பும் ஆகும்.



எஸ். பாமினி

கடந்த 30 வருடங்களாக நடந்து முடிந்த யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள், இன்று அந்த யுத்த நிலைமை மாறி 3வருடங்களாகியும் பல இன்னல் களை சந்தித்து வருகின்றனர். குறிப்பாக இத்துன்பங்களுக்கு அதாவது வலிவடக்கு மக்களே இவர்கள் ஆரம்பத்திலிருந்து இன்று வரை துன்பங்களுக்கு மேல் துன் பங்களை அனுபவித்து வருகின்றார் கள் யாழ்குடாநாட்டின் இடப்பெயர் வில் இருந்து இன்றுவரை வீடு காணிகள் இல்லாமல் நாடோடிகளா கவும் அநாதைகளாகவும் அகதிக ளாகவும் வாழ்க்கை நடாத்துகின்ற னர். ஆரம்பகாலங்களில் இடம் பெயர்ந்தவர்களிற்கான உதவிகள் வழங்கப்பட்டு வந்தபோதும் தற்போது அவை நிறுத்தப்பட்டுவிட்டன.


வலிவடக்கில் இருந்து தற்போது அவை நிறுத்தப்பட்டுள்ளன.

வலி வடக்கின் குறிப்பாக ஒட்டகப்புலம், வசாவிளான் மேற்கு, தெற்கு குரும்ப சிட்டி மேற்கு, கட்டுவன், மயிலிட்டி போன்ற பிரதேச மக்கள் சொந்த இடங்களுக்கு செல்லமுடியாமல் வாழ்ந்து வருகின்றார்கள். இதுதொடர்பாக 20 வருடங் காலாக வசாவிளானில் இருந்து இடம்பெயர்ந்து அச்சுவேலியில் வசித்து வரும் ராஜேஸ்வரன் என்பவர் கருத்து தெரிவிக்கையில், 'எனது கணவர் உள்நாட்டு யுத்தம் காரணமாக 1990ஆம் ஆண்டு இறந்து விட்டார் எனப் பிள்ளைகளும் இல்லை எந்தவித உதவியும் இல்லை நிவாரணமும் இப்போது தராமல் விட்டுட்டாங்கள் இப்பதான் வாங்கில் சுயதொழில் கடன் எடுத்து சொந்தமாய்




கடை நடாத்திக்கொண்டு வாறன் இதிலவாற வருமானம் எனக்கு ஓரளவு போதுமானதாக இருக்கு ஆனால் சொந்த இடத்திற்கு எப்பபோவமோ தெரியல எத்தினைகாலம்தான் வாடகை வீட்டில இருக்கிறது. என ஆதங்கத்துடன்தெரிவித்தார்.

# வலிகளுடன் வலிவடக்கு மக்கள்



1990ஆம் ஆஒண்டு மல்லாவி இராணுவ முகாம்மீதான தாக்குதலுடன் அதனை அண்டிய பிரதேச மக்கள் அன்றில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங் களில் இருந்தார்கள் தற்போது அப்பிரதேச ங்கள் சில இராணுவத்தினரால் விடப்பட்டு ள்ளன. புன்னாலைக்கட்டுவான்வடக்கு, வசாவிளான் மேற்கு, புன்னாலைக்கட்டுவா ன்மேற்கு, குரும்பசிட்டி போன்றஇடங்கள் ஓரளவு விடப்பட்டுள்ளன. தற்போது அம்மக்கள் அங்கு குறைவாகவே குடியமர் ந்துள்ளனர். குடியமர்த்தப்பட்ட மக்களு க்குஅடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படாமல் இருப்பது வேதனை அழிக்கிறது. இதுதொடர்பாக வசாவிளான்மேற்கில் வசித்துவரும் அன்னலதா குறிப்பிடுகையில், இங்கு மீளக்குடியமர்த்தி இருக்கிறாங்க எந்தவித வசதிகளும் செய்து தரவில்லை. மலசலவசதி இல்லை



எனவும் தெரிவித்தார்.
மேலும் குடிநீருக்காக வசாவிளான் மகாவித்தியாலயத்திற்கு தான்போகவேண்டி இருக்கு . யாழ். குடாநாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கு ஆரம்பத்தில் தெரிவுசெய்யப்பட்ட சிவப்பு நிறக்குடும்ப அட்டையை பயன்படுத்தி உலர் உணவுப் பொருட்கள் கொடுக்கப்பட்டன . இவ் உணவுப்பொருட்கள் கடந்த வருடம் ஆடிமாதத்தில் இருந்து இடைநிறுத்தப்பட் டுள்ளதாக அச்சுவேலி வடக்கு கிராம சேவையாளர் திரு .எஸ் சாந்தருபன் தெரிவித்தார்.

தற்போது மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து மயிலிட்டியில் வசிக்கும் தர்மலிங்கம் சாவித்திரி அவர்கள் தெரிவிக்கையில் கையில் சொந்த இடத்தில் இருந்து இடம்பெயர்ந்து பல துன்பங்க ளுக்கு மத்தியில் தற்போது மிகவும் கிராமத் தின் சொந்த இடத்திற்கு எப்பபோவன் என்று இருக்கு . வாடகை கொடுத்துதான் வாழ்ந்துவருகின்றேன். எனக்கு மேலும் அதே இடத்தை சேர்ந்த ஆனந்தன் கருத்து சறுகைளில் நான் சொந்த ஊரில நல்லாய் வாழ்ந்து வந்தனான் எனக்கு 100 பரப்பு காணி இருக்கு நல்ல விவசா யம் செய்தனான் அதோட கிறேப்ஸ் தான் அதிகமாக பயிரிடுறானான் இப்ப நான் வந்து மருதனார் மடத்தில் காணி ஒன் னை குத்தகைக்கு எடுத்து அதே கிறேப்சை த்தான் பயிரிடுறனான் இதனால்பெரிய இலாபத்தை ஈட்ட முடியாமல் இருக்கு

இப்ப விலைவாசி அதிகம் பொருட்க ளின் விலையும் நல்லா ஏறிவிட்டுது குடும்ப பொருளாதார நிலையை கொண்டு செல்லமுடியாமல் இருக்கு சொந்த இடத்திற்கு சென்றால்தான் ஓரளவு பொருளாதாரலாபத்தை ஈட்ட முடியும்.
இதே போல் காங்கேசந்துறையில் வசித்துவருமதுவரும் பிரதீபன் சறுகையில் என்னுடையஅப்பா காங்கேசந்துறை ஊநஅநவெ கயஉவ ழசல லதான் வேலை செய்தவர் இப்ப நாங்கள் மருதனார் மடத்தில வாடகை வீட்டிலதான் இருக்கிறம். இப்ப வீட்டுகட்காரர் வெளிநாட்டில


இருந்து வந்து விற்கப் போறாங்க அதனால இரண்டுமாதத்திற்குள் வேற வீடுபார்த்து போக வேண்டி இருக்கு

சொந்த ஊரில அப்பா வியர்வை சிந்திக்கட்டின வீட்டில எப்பதான் இருப்பமோ தெரியல இவ்வாறு தெரிவித்தார்.


இவ்வாறாக வலிவடக்கு மக்களின் சொல்லண் ணாதுயரத்திற்குள் ளேயே வாழ்ந்து வருகின்றனர்
இவ்வாறு உயர்பாது காப்பு வலயம் என்று சொல்லப்படுகின்ற பகுதிகளில் இருந்து மக்கள் தங்கள் ஊர்களுக்கு செல்லமுயாமல் பல. இன்னல்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.
இவர்களின் நிலை கண்டு உரிய அதிகாரிகள் முன்வந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பும் ஆகும்.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதனை கவனத்தில் கொள்ளவேண்டும்

எஸ்.கபிலன்



# வேலூருக்கோர் ஜலகண்டேஸ்வரர்



வரலாற்று சிறப்பு மிக்க பல இடங்கள் வெறும் சுற்றுலாத் தலமாக மட்டுமே விளங்கும். ஆனால் வேலூர் கோட்டையில் உள்ள ஜலகண்டேஸ்வரர் ஆலயம் ஒரு ஆன்மீத் தலமாகவும் திகழ்கிறது. சுமார் 650 ஆண்டுகளுக்குமுன்பு விஜயநகரப்பேரரசு காலத்தில் வேலூரில் சிற்றரசர்களாக இருந்த திம்மரொட்டி மற்றும், பொம்மரெட்டி ஆகிய இருவரும் ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தை உருவாக்கினர். கோவிலுக்குப் பாதுகாப்பாக கோட்டையையும் அகழியையும் உருவாக்கினார்கள்.

அதன்பின் 200 ஆண்டுகள் கழித்து இன்றைக்கு 450 ஆண்டுகளுக்கு முன்பு திப்புசுல்தான் படையெடுத்து வரும் செய்தி வேலூருக்கு எட்டியது .சாமி இருந்தால் தானே கோவிலை இடிப்பார்கள் என தீர்க்கமாக யோசித்த இந்துக்கள் வேலூரில் இருந்து 4 கிலோ மீட்டர்கள் தொலைவில் இருக்கும் சத்துவாச்சாரியில் 7 அடி உயரமுள்ள ஜலகண்டேஸ்வரர் சிவலிங்கத்தை மறைத்து வைத்தனர். இருப்பினும், திப்புசுல்தான் படையெடுப்பில் கோவில் தாக்கப்பட்டு சிற்பங்கள் சிதிலமடைந்தன. காலப்போக்கில் வேலூர் கோட்டை கிறிஸ்தவ ஆங்கிலேயரின் வசமானது. இவர்கள் தங்களின் வழிபாட்டிற்கென ஒரு தேவாலயத்தையும் பயன்பாட்டிற்கென சில கட்டிடங்களையும் கட்டினர். கி.பி.1921 இல் தேவாலயம் மற்றும் சில கட்டிடங்களைத்தவிர கோவில் மற்றும் கோட்டைகளை தொல்பொருள்துறையிடம் ஒப்படைத்து விட்டனர்.


நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் ஜலகண்டேஸ்வரர் கோவிலில் சாமியை வைக்க சிற்சில முயற்சிகள் நடைபெற்றுவந்தன. இந்தியாவின் முதல் துணைப்பிரதமர் சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் சீரிய முயற்சியால் குஜராத் மாநிலத்தில் மசூதியாக மாற்றப்பட்டிருந்த சோமநாதபுரம் சிவாலயம் மீண்டும் முழுக்கோயிலாக மாற்றப்பட்டது. இதனால் கிடைத்த உந்து சக்தி வேலூரிலும் மீண்டும் ஜலகண்டேஸ்வரரை நிறுவ முயற்சித்தது.

கி.பி.1975 முதல் 1977க்குள் திரு.முருககிருபானந்தவாரியார் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு 1, 00.000 வரை நிதி திரட்டி சுவாமியை மீண்டும் நிறுவும்முயற்சி துவங்கியது. அப்போது மத்திய அரசு மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சித்துறையின் ஒத்துழைப்பு கிடைக்காததால் இம்முயற்சி தொடங்கப்படவில்லை. வாரியார் சுவாமிகளிடம் இந்தப்பணிக்காக கொடுக்கப்பட்ட 1, 00, 000த்தைஅவர் திருப்பிக்கொடுத்துவிட்டார். பின்னர் அந்தத் தொகையைக்கொண்டு வாரியார் சுவாமிகள் பெயரில் ஒரு திருமணமண்டபம் கட்டப்பட்டது.

இந்நிலையில் கி.பி.1980 ஆம் ஆண்டில் இந்து முன்னணியில் துவக்கப்பட்டது. இந்துமுன்னணி மாநில அமைப்பாளராக இருந்த இராம.கோபாலன் அவர்கள் வேலூருக்கு விஜயம் செய்தார்.அப்போதுதான் வேலூரில் இந்து முன்னணியை உருவாக்கி வேலூர் ஜலகண்டேஸ்வரரை பிரதிஷ்டை செய்வது என முடிவு செய்யப்பட்டது.



வீரத்துறவி இராம.கோபாலன் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் ஆர்.எஸ்.எஸ்.கோட்ட அமைப்பாளராக இருந்த வீரபாகு அவர்கள் தலைமையில் இந்துமுன்னணி மற்றும் பொதுமக்களின் ஆதரவுடன் 14.3.1981 அன்று ஜலகண்டே ஸ்வரர் வேலூர் கோட்டையில் மீண்டும் பிரதிஷ்டை செய்யப் பட்டது. அவ் ஆலயத்தில் இன்று வரை சிறப்பான பூஜைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.
இந்த வெற்றியே அயோத்தியில் இராமர் ஆலயம் மீட்பதற்கு மாபெரும் உந்துசக்தியாக உருவெடுத்தது என்கின்றனர் அப்பகுதி மக்கள்.
வரலாறு, புராணம் என இரண்டும் சேர்ந்து காணப்படுவதே இந்த ஜலகண்டேஸ்வரர் ஆலயம்.
இந்த கோயிலின் சிறப்பே இது அமைக்கப்பட்டிருக்கும் விதமும் அதனுள் இருக்கும் கலைச் சிற்பங்களும்தான். விஜயநகர கட்டடக் கலையின் அற்புதமாக விளங்கும் இக் கோயிலின் வெளிப்பிரகாரத்தின் தெற்கில் அமைந்துள்ள கல்யாண மண்டபம் பிற்கால விஜயநகர கட்டடக் கலையின் ரத்தினமாக விளங்குகிறது. இத் திருத்தலத்திற்கு சிற்பங்க ளும் கலை எழில்மிக்க தூண்களும் சிறப்பு சேர்க்கின்றன. இங்கு முதல்முறையாக வருபவர்களும் ஒவ்வொரு முறை வருபவர்களும் சரி இக்கோயிலின் அமைப்பைப் பார்த்தும் பரவசப்படுகின்றனர். அப்படி அமைந்துள்ளது இந்த கோயி லின் வேலைப்பாடு. இங்கு பதிக்கப்பட்டுள்ள ஒவ்வொன்றும் சற்களா அல்லது சாந்துகளா தெரியவில்லை. நம் பார்வையைப் அப்படி ஈர்க் கின்றன.
இந்த கோயிலின் தெற்கு புறத்தில் பிரதான நுழைவா யில் உள்ளது. நுழைவாயில் கோபுரம் ஏழு நிலைகளைக் கொண்டது. கோயி லுக்குள் செல்வதற்கு சில படிகட்டுகளில் இறங்கித்தான் செல்ல வேண்டும்.





உள்ளே நுழையும் போது அங்கே கம்பீரமாக காட்சி அளிக்கும் கோபுரம் நம் கண்களை அகல விரிக்கச் செய்கிறது.

கோயிலுக்குள்ளே குளமும் இடது புறத்தில் கல்யாண மண்டப மும்அமைந்துள்ளது. அங்கே உள்ள ஒவ்வொரு தூணும் ஒவ்வொரு விடயத்தை எடுத்துச்சொல்கின்றன.
கோயிலின் வடமேற்கு திசையில் வசந்த மண்டபமும் அதை யொட்டி சிம்ம கிணறும் உள்ளது. சிம்மக் கிணற்றுக்கு அருகே கம்பீரமாக எழுந்தருளியுள்ள நந்தி உள்ளே இருக்கும். இது சிவனை நோக்கியவாறு அமர்ந்துள்ளது.
கோயிலின் தனி சந்நதியில் வலம்புரி விநாயகர் அமர்ந்துள் ளார். அவரையடுத்து செல்வ விநாயகர், வெங்கடேசப் பெருமாள், வள்ளி – தேவசேனா உடனுறை சுப்பிரமணி யர் ஆகியோரை வணங்கிவிட்டு அகிலாண்டேஸ்வரி அம்மன்சந்நதிக்குச் செல்லலாம்.
அம்மன் சந்நதியின் சுற்றுப்புற சுவர்களில் விநாயகர், மாகேஸ்வரி, வைஷ்ணவி, பிராம்மி, லட்சுமி, சரஸ்வதி ஆகிய தெய்வ விக்கிரகங்கள், எழிலோடு பதிக்கப்பட்டுள்ளன.
அகிலாண்டேஸ்வரி சந்நதியின் இருபுறமும் கம் பீரமாக துவார பாலகியர் உள்ளனர். இதனை த்தாண்டி ஜலகண்டேஸ்வர் சந்நதிக்குள் செல்லவேண்டும். இத்தனையையும் தாண்டி ஜலகண்டேஸ்வரரைக் கண்டதும் இத்தனைக்கும் காரணமானவரைக் கண்ட ஒரு பிரம்மிப்பு நம்மிடையே பரவுகிறது. எந்த வேண்டுதலையும் முன் வைக்காமல் உங்களை பார்த்த ருள பாக்கியம் கிட்டியதே போதும் என்று ஒரு மனநிறைவைத் தருகிறார் இந்த கர்ப்பக்கிரகத்தில் வீற்றிருக்கும் ஈசன். கோயிலுக்கு அருகே அகழி சூழ்ந்த அழகிய வேலூர் கோட்டையை யும் கண்டு வரலாம். அங்கு தற்போ து படகுச் சவாரியும் சிறப்பாக நடைபெறுகிறது.

எஸ். கபிலன்

# நீர்த்தேக்கம்நோய்த்தாக்கம்

மனிதனின் அழிவு என்பது எதந்தப் பக்கத் தாலும் வரும் இதற்கு பல உதாரனங்களை கூறலாம் இலங்கையினை எடுத்து கொன்டால் இலங்கையில் நடந்த யுத்த திலும் சுனாமியினாலும் பலரது உயிர் பிரிந்துள்ளது இவ்வாறு பல போர் இழப்புக் கள் நடை பெற்று முடிவடைந்து விட்டன தற்போது எந்த வகையில் இறைவன் உயிரை எடுப்பது என நினைத்தான் போல இப்பொழுது எல்லாம் கோர விபத்துக்கள் புதுவிதமாகன நோய்கள் என கன் இமைக் கும் நோரத்தில் பல போரின் உயிரினை இறைவன் எடுக்கின்றான் அவ்வாறு இவ் மனிதர்களை அழிக்கும் நேயோ டெங்கு இது எடிஸ்ஏகிப்டி ஏடிஸ் அல்போடிக்டஸ் என்ற இரனண்டுவகையான நுளம்பகள் இந் நோய் கிருமியினை பரப்புகின்றது டெங்கு நோய் என்பது எமக்கு தொண்டே நம் கையினை நெருப்புக்குள் வைப்பது போன்றது எனொன்றால் இவ்நோயினை பரப்புனகின்ற நுளம்பினை நாமோ பரப்புகின் றோம் எனொன்றால் இவ் நுளம்பானது நீர் நிற்கும் எல்லா இடங்களிலும் இவ் நுளம்பு பரவும் இவ்நுளம்புபரவும் இடங்கள் கொங்ரீட் கூரைகள் .இ பீலீ*கள் கான்கள் போன்றவறறிலுளள நீர்களில் சூழலிலுள்ள நீர்கள் தோங்கக்கூடிய சிரட்டை கள் போத்தல்கள் பொலித்தீன் பைகள்போன்றவற்றில் பாவிக்கக் கூடிய பாத்திரங்கள் வாளிகள் போன்றவற்றில் தோங்கும் நிரிலும் பூந்தொட்டிகள் பாத்திரங்கள் போன்றவற்றில் தோங்கி நிற்கும் நீரினை ஒரு நாள் விட்டு ஒரு நாள் மாற்றாமல் ாமல்இருந்தால் எறும்பு வாராமல் மேசை கால்களுக்கு வைக்கப்படும் பாத்திரங்களில் தண்னீரையும் குளிருட்டிகளில் இரந்து வெளியோறும் நீரில் தண்ணிர் தாங்கிகளில் வாளியை விட்டு எடுக்காத போது அங்கு நுளம்புகள் பெருகலாம் பழையரயர்களில் கானப்படும் நீர் போன்றவற்றில் இவ் நுளம்பு பரவுகின்றது இந் நுளம்புகள் கறுப்பு நிறமான முட்டைகளை தனித்த னியாக ஒரு தடவையில் 30 முதல் நூறு வரை தண் ணீரின் மோல் இடும் இவை கடிக்கும் நேரம் சூரியன் உதித்த பின் 2-3 மணித்தியாலங்கள் பின்னோரம் சூரியன் மறைவதற்கு முன் 2-3 மணித்தியாலயங்கள்என கூறலாம் . ஆனால் எல்லா வோளைகளிலும் இவ் நுளம்பு கடிக்கும் .யாழ் மாவட்டத்தில் இவ் நோய் கட்டப்பாட்டுடடே உள்ளது ஆனால் மக்களின் அலட்சியங்களினால் இவ் நோய்த்தாக்கம் அதிகரிக்கவும் வாய்ப்பாக உள்ளது ஏனொன்றால் இவ் நோய்த்தாக்கத்தில் இருந்து மக்களை காப்பாற்ற பல்வேறு விதி முறைகளை போட்டாலும் அவற்றை மக்கள் கடைப்பிடிப்பதில்லை டெங்கு நுளம்பை கட்டுப்படுத்த பொது சுகாதார பரிசோதகர் சுகாதாரத் தொன்டர்கள் என்பவர்கள் வீடு வீடு வீடாக சென்று மக்களுக்கு தொளிவு படுத்தியும் டெங்கு நுளம்ப பரவும்



வகையில் வளவினை வைத்திரந்தவர்கள் மீது தன்டப்பணம் அறவிட்டும் வருகின்றனர் இவ்வாறு டெங்கு நுளம்பினை கட்டுப்படுத்தி வந்தாலும் டெங்கு நோயின் பெருக்கம் அதிகரித்து வருகின்றது இந்நோயின் அறிகுறிகள் நான்கு நிலைகளில்தென்படும்.


1அறிகுறிகள் இல்லாத காய்ச்சல்

2. ஆரம்ப வநிலையில் கானப்படும் டொங்கு காய்ச்சல்

3.இஇரத்தப்பொருக்குடன்"கூடியடெங்குகாய்ச்சல் நிலை

டேங்குக் அதிர்ச்சியின் அறிகுறி நிலை முதல் நிலையை தொடர்ந்து அடுத்தடுத்த நிலைகள் ஒன்றன் பின் ஒன்னறாக ஏற்படும் ஆரம்பநிலை டெங்கு காய்ச்சல் ஓரிரு நாட்களில் குறையாவிடின் உடனடியாக வைத்தியசென்று சிகிச்சை பெற்றால்முற்றிய நிலை ஏற்படுவதை தடுத்து இந்நோயை தவிர்க்கமுடியும் பெரும்பாலான டெங்கு நோயாளர்கள் நோய் முற்றிய நிலையிலேயே வைத்தியசாலைக்கு வருவதனால் அதிகமானோர் சிகிச்சை பெறவதற்கு முன்பே இறந்து விடுகின்றனர்.

திடீரென ஏற்பட்ட கடுமையான காய்ச்சல், தாங்க முடியாத தலைவலி, முக்கியமாக முன்தலைப்பக்கத்தில் , கண்களின் பின்புறத்தில் வலி , கண்களை உருட்டும்போரு கண்களில் வலி, உடல்வலி, மூட்டுகள் தசைகள் கை,கால் எலும்பு போன்றவற்றில் வலி குமட்டல், வாந்தி, சிறிய சிவந்த புள்ளிகளைக்கொண்ட சிரங்குகள், கண் சிவத்தல், உடல் சோர்ந்து வெளிறிக்காணப்படல் போன்றவை ஆரம்பநிலை டெங்குக்காய்சசலின் அறிகுறிகள்ஆகும் இவ் அறிகுறிகள் தென்பட்டதும் உடனடியாக நோயாளியை அரசாங்க அமருத்துவமனைக்கு எடுத்துச்செல்லவேண்டும். அலட்சியமாக இருந்தால் இரத்தப்பெருக் குடன் கூடியடெங்குக் காய்ச்சல் ஏற்பட்டு 7 முதல் 08 நாட்களுள் டெங்கு அதிர்ச்சி அறிகுறிநிலை ஏற்படும். உடம்பு குளிர்தல்



பதற்றமு், அரைத்தூக்கம் அதிகரிததும் நாடித்துடிப்ப அதிகரித்த சுவாசம்திடீரெனக்காய்ச்சல் குறைதல் தோலில் இரத்தக்கசிவு இரத்தவாந்தி, கறப்புநிற மலம் வயிறு கால் முதலிய வற்றில் விக்கம்ரத்த நாளத்தில் அடப்பு ஏற்பட்டு இரத்த ஓட்டம் தடைப்படல் இரத்தத்தில வெள்ளை அணுக்கள் மற்றும் சிறுதட்டுககளின் எண்ணிக்கை குறைதல் முதலியன டெங்குநோயின் அறிகுறிகளாகும்.

இவ் நோ ய் பற்றி சாவகச்சோரி வைத்திய அதிகாரி சி. தூயாளன் தெரிவிக்கையில் தற்ப்போது சாவகச்சேரியில் டெங்கு நோயினை கட்டுப்படுத்தபல நடவடிக்கைகள் மேற் கொன்டு வருகின்றோம் இந்த வரடம் தொடக்கத்தில் தொனமராட்ச்சி பிரதோசத்தில் உள்ளஅனைத்து வீடுகளிலும் சோதனைசெய்து டெங்கு நுளம்பு பரவும் வகையில் வைத்திருந்த பலருக்கு குற்றப்பணமும் எச்சரிக்கையும் விடப்பட்டது இவ் நோய் அதிகம் சிறுவர்களையோ தாக்கின்றது கடுமையான காய்ச்சல் தலைவலி கண்களுக்கு கீழான தசைகளிலும் வலி ஏற்ப்படல் பசியின்மை வாந்தி ஏற்ப்பல் தோலி சிவப்ப நிற புள்ளிகள் ஏற்ப்படல் போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் வைத்திய சாலைக்கு வரவேண்டும் ஆனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் இவ்வாறாண நோய்களை அசன்டையீனம் செய்வதானால் உயிஇழப்புகள் ஏற்ப்படுகின்றத


சி. பாமினி




காற்றிலே தவழ்ந்து வந்து தாலாட்டுப்பாடும் கடல் தன்னிகர் இல்லா செல்வங்களை வாரி வழங்கும் கடல் சாதி மத மொழியை எல்லாம் கடந்து நிற்கும் பெருந்தொகையான காதலர்களுக்கு குட்டித்தாஜ்மகால் எது தெரியுமா, கடல்தானே இரவு கடலுக்கு சென்று ஆழம் பார்த்து மீன்பிடிக்கும் மீனவனுக்கு உணவு, உடை உறையுள் எல்லாம் கடல் தான். விரும்பி விரும்பி சுவைக்க அரிய மீன்களைத்தரு .கின்றதும் மீன்பிடித்தலை வாழ்வாதாரமாகக்கொண்ட மீனவர்களின் தாயும் கடல்தானே மேலும் பொருளாதார இறக்குமதிகள் ஏற்றுமதிகள் நாடுகாண்பயணங்கள் , உள்ளூர் பயணங்கள் ஆகியவற்றின் கடல்வழிப்பாதையும் கடல்தானே 'சிறு நண்டு மணல் மீது படம் ஒன்று கீறும் சிலவேளை அதை வந்து கடல்கொண்டு போகும்' என்பது கவி வரியாகும் கடலலை உருவாவதற்கு பிரதான காரணி வழியின் இறுக்கம் காற்றாகும். இக்காற்று வீசும்போது கடலலை உருவாகிறது. இவ்வாறு உருவான கடலலை 26ஆம் திகதி மார்கழி மாதம் 2004ஆம் ஆண்டு தனது கட்டுப்பாட்டை இழந்துவிட்டாள். இதன் காரணமாக உலக மக்கள் சனத்தொகையில் 184167 மக்களை அந்த அலை காவுகொண்டது. மேலும் 45752பேர் காணாமல் போனார்கள். 7 வருடங்களாகியும் இவர்களில் எவரும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. 125000 பேர்கள் காயமடைந்தார்கள் கடல்த்தாய் பலமுறை தனது கட்டுப்பாட்டை மீறினாலும் இவ்வாறான அழிவை ஒருபோதும் கண்டதில்லை. இவ்வாறான பாரிய அழிவை ஏற்படுத்தியது இதுவே முதல் தடவையாகும்.

கடலுக்கு அடியில் இடம்பெறும் பூமியதிர்ச்சி, மண்சரிவு, எரிமலை வெடிப்பு, விண்கற்கள் வீழ்தல், என்பன காரணமாக சமுத்திரப்பரப்பில் பேரலை என்று சொல்லப்படுகின்ற இராட்சத அலைகள் உருவாகின்றன. இதனால் சமுத்திரப்பரப்பில் திடீர் விசைக்கிளப்பம் உருவாக அதே கணத்தில் தொடர் அலைகள் உருவாகின்றன. அதனையே சுனாமி என்கின்றோம். புவியோடு 7 பெரிய கவசத்தகடுகளாலும் ( வட அமெரிக்கத்தகடு யுரேசியத்தகடு தென் அமெரிக்கத்தகடு, இத்தோனேசியத்தகடு, பசுவிக்தகடு, அந்தாட்டிக்காதகடு) போன்ற 12 சிறிய தகடுகளாலும் உருவாகியுள்ளது. இத்தகடுகள் சமுத்திரப்பரப்பில் ஏற்படும் நிகழ்வு காரணமாக கடற்தளமானது திடீரென்று சீர்குலைந்து மேலுள்ள நீரை நிலைக்குத்தாக இடம்பெயர்க்கும்போது சுனாமி உருவாகின்றது.

# ஆழிப்பேரலையும் அழிவும்





சுமாத்திராதீவிற்கு 250 கிலோமீற்றர் மேற்காக இந்திய அவுஸ்ரேலிய சுவாசத்தகட்டின் மேற்கில் 9.1றிச்ரர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரரணமாக உருவாகிய சுனாமிப்பேரலைகள் இந்திய கரையோரப்பக்கம் நகர்ந்து எமது நாட்டின் கரையோரப்பிரதேசத்தினையும் என்றும் இல்லாதவாறு தாக்கியது. இதன் தாக்கத்தினால் இலங்கையில் மக்கள் இறந்தார்கள் 6000பேர்கள் காணாமல் போயினர் 07ஆண்டுகள் கழிந்தபோதும் இவர்களில் எவரும் கண்டுபிடிக்கப்படவில்லை 55ஆயிரம் பெயர்கள் தமது இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர்ந்தனர் கரையோரப்பகுதிகளில் குடியிருக்கும் மக்கள் சுனாமிக்குப்பின்னர் கடற்கரையில் இருந்து ஏறக்குறைய 300அடி தள்ளியே குடியமர்த்தப்பட்டார்கள் . காரணம் மீண்டும் இவ்வாறான அனர்த்தம் ஏற்படும்போது தம்மை விவைில் தயார்படுத்தி வேறு இடத்திற்கு செல்வதற்கே. இம்முறை சுனாமி அடித்தும் 07ஆண்டுகள் கழிந்தநிலையிலும் மக்கள் இன்னும் அந்த அதிர்ச்சியில் இருந்து மீண்டு வரவில்லை இது இன்று நடந்தது மாதிரி அவர்களின் மனதில் பதியப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டும் போரினால் பாதிக்கப்பட்டும் இருக்கும் கரையோரமக்கள் பலருக்கு இன்னமும் சுனாமித்திட்ட கட்டிடங்கள் வழங்கப்படாதது கணக்கூடியதாய் உள்ளது. இவர்கள்இன்னும் தற்காலிக கொட்டகைகளில் குடியமர்வது தீராத வடுக்கள் மறையாததற்கு அடிப்படையான காரணமாகிறது. அரசாங்கத்தினதும் விடுதலைப்புலிகளினதும் கட்டுப்பாட்டில் இருந்த கரையோரப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களை குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த முல்லைத்தீவு கரையோரபகுதி சுனாமி அடித்து ஓரிரு வருடங்களுக்கு மீண்டும் அம் மக்களுக்கு அவ்விடங்களில் புத்துயிர் பெற்றுவிட்டன. ஆனால் ஏழ வருடங்கள் ஆகியும் இன்னும் சுனாமி வீட்டுதிட்டங்களும் வீதிகளும் மக்கள் பாவனைக்கு விடப்படவில்லை என்றால் எந்த உளமருத்துவர்வந்தாலும் இம்மக்களின் உணர்ச்சிகளை மாற்றமுடியாது. ஏழு ஆண்டுகள் கழிந்த இந்நிலையிலாவது அரசு இவர்களுக்குரிய பங்கை வழங்குமா?

சுமாத்திரா தீவுக்கு 250 KMற்கு மேற்காக இடம் பெற்ற இந்த சுனாமியில் இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, மாலைதீவு, நிக்கோபார், அந்தமான்தீவுகள், பங்களாதேஷ், கென்னியா, உகண்டா,நிக்கோபார், கன்சானியா, எதியோப்பியா, சோமாலியா, இந்தியா, இலங்கை உள்ளிட்ட பலஅபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளே பெரிதும் பாதிக்கப்பட்டவை ஆகும். இலங்கையில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பெருமளவு தேசம் ஏற்பட்டது.

கார்த்திகை மாதம் 26ம் திகதி ஐயோ அலைவருகுது.. அலைவருகுது.. ஓடுங்கோ... ஓடுங்கோ... உங்க கடலை திரும்பிப்பாருங்கோ என்று பனித்த வாய் மூட முன்னர் அவ்விடத்திலே பரிதாபகரமாக உயிரிழந்தவர்களின் ஏழாம் ஆண்டுகளின் நினைவு தினமும் கொண்டாடப்படுகின்றது.

கடலுடன் காலகாலமாக வாழ்ந்த மக்கள் கடலலை இப்படி எழும் என்று அவர்கள் கனவு கண்டது இல்லைத்தானே அதனால் தானே இவர்கள்அலை என்றதில் அவ்வளவு அக்கறை கொள்ளவில்லை. கடல் வருகுது என்று ஓடியவர்கள் கடல்

அலையினால் அடைக்கப்பட்ட சுவர்களிலும், மரங்களிலும் அடிபட்டு உயிர்களை மாய்த்துக் கொண்டார்கள்.

இறந்த ஒவ்வொருவரையும் தேற்றிக்கொண்டு எம் கடமையினை ஆற்றிக்கொண்டு எம்மையே மாற்றிக்கொள்வோம்.



எஸ்.தர்சிகா



ஏழாலை பெரியதம்பிரான் கோவில்



யாழ்-மத்திய கல்லூரி நீச்சல்த்தடாகம்



வேலூர் ஜலகண்டேஸ்வரர்

Print By : Noble printers. 0212220386